சுதேசமித்திரன்

25—7—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN

ILLUSTRATED WEEKLY



இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுடவார்ட் வைத்தியனின்

“கிரைப் வாட்டர்”

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

ஸங்கீத ரஸிகர்களுக்கு ஓர் நல் விருந்து !

கிருஷ்ண பக்தியில் தலைசிறந்த ஸாஹித்ய
ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள் அருளிய

அஷ்டபதி

(கீத கோவிந்த மஹா காவ்யம்.)

கீர்த்தனசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்காரால் பதிப்பிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு)

ஸம்பிரதாயத்தை அனுசரித்து ஸ்வரப்படுத்தி அரிய அனுபந்தங்களுடன் கூடியது.

ஸங்கீத ஸாஹித்யங்களில் முந்திய நூல். பாரத நாட்டில் பல பாகங்களிலும் முக்கியமாக தமிழ் நாட்டிலும் பாகவத ஸம்பிரதாயஸ்தர்களும், ஸங்கீத வித்வான்களும் போற்றிப் பாடும் உத்தம நூல். கீர்த்தனசார்யர் பல மகான்களையும் ஸங்கீத மேதாவிகளையும் கலந்து பேசி அபூர்வமான ஆராய்ச்சியுடன் வெளியிட்ட ஒப்புயர்வற்ற நூல்.

அஷ்டபதி மூலமும், வர்ணமெட்டும், ஸங்கீதத்தையும் கதையையும்பற்றின் குறிப்புகளும் அடங்கியிருக்கின்றன. அத்துடன் ஜயதேவ ஸ்வாமிகள் சரித்திரம், அந்தந்தக் காலத்தில் உபயோகிக்கப்பட்ட ராக தாளங்கள், நாயக நாயகி விவரங்கள், தமிழ், தெலுங்கு, கன்னட கேரள நாடுகளில் அஷ்டபதிகளைப் பாடும் விதங்கள், கீதகோவிந்த உள்ளுரைப் பொருள்கள், ப்ரம்ம வித்யா உபதேசம் முதலிய அரும்பெரும் விஷயங்கள் அடங்கியுள்ளன.

வெகு காலமாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நூல் வெளிவந்துள்ளது.

எல்லா சுதேசமித்திரன் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூ. 2. தபால் செலவு அணா 8.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ், மவுண்ட்ரோட், சென்னை.



A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர் பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபீல்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

மற்ற விவரங்களுக்கும், சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க........................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..................................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM
189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

THE TRUTH IN YOUR HOROSCOPE

YOUR REAL LIFE TOLD FREE

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points. etc ? Here is your chance to test FREE the skill of Pundit Tabore India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advise contained in his Horoscopes on business, speculations, Finance, Love affairs, Friends Enemies, Lotteries, Travels, Changes Litigation Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you Free your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss). address and date of birth (English Calendar) all clearly written by yourself. No money wanted for Astrological Work, Postage etc., but send about 6 Annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consulations by mail only. Address: **PUNDIT TABORE (Dept. 337), Upper Forjett Street: Bombay. 26.**

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறர்:—

" தாங்கள் எனக்கு மேமீ 27–ந் தேதியிலிருந்து ஜூன்மீ 3–ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. **N. B.** வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

பீம-வீர்



JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE

''**பீம-வீர்**'' பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப் பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40–நாள் மருந்து ரூ. 3-12–0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,

26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

க்ளூகோனேட் - டி

(கால்ஷியம் க்ளூகோனேட் விடமின் டி - யுடன்கூடியது)

க்ளூகொனேட் டி மாத்திரைகள் சுத்தமான கால்ஷியம் க்ளூகொனேட்டும் விடமின் டியும் மிகருசியுள்ள சாக்கலேட்டில் சேர்ந்திருப்பவைகள். ஆதலால் குழந்தைகளும் பெரியோர்களும் அதை எளிதில் சாப்பிடமுடியும். கால்ஷியம் குறைவாயுள்ள எல்லாவியாதிக்கும் உபயோகமானது.

பெங்களூர், மல்லேஸ்வரத்தில் உள்ள தி மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரெட்ரி லிமிடெட்டாரால் தயார் செய்யப்பட்டது.

ஒரு

I·T·L

தயாரிப்பு

விற்பனை ஏஜன்டுகள்

பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 63. சென்னை.

D.J.K.78.T.M.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**

28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபாற் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: ''சுதேசமித்திரன்'' புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

உங்கள் எதிர்காலம்

பணமில்லைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

டாக்டர் பால்ஸ் லோடஸ் ஹனி *மிக அற்புதமான மூலிகை–கண்ணில் பூ விழுதல், கிளாகோமா, மற்றும் கண் உபாதைகளை மாயமாக குணமாக்கி பார்வையை அதிகரிக்கச்செய்யும். விலை புட்டி 1–க்கு ரூ. 2—8—0.*

டாக்டர் பால்ஸ் நயம் கஸ்தூரி : *பரிசுத்தத்திற்கு உத்தரவாதம். தோலா விலை ரூ. 80. அரைக்கால் தோலாவிற்குக் குறைந்து சப்ளை செய்ய முடியாது.*

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: *கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணையில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.*

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2–0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1–8.
2.	கியோரா	,, 2–0.	9.	சுரங்கி	,, 1–8.
3.	காஸ்	,, 2–0.	10.	வில்வி	,, 1-0.
4.	போகுல்	,, 1–8.	11.	லோடஸ்	,, 1–0.
5.	ஜாஸ்மின்	,, 1–8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கதம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனு	,, 1-8.	14.	கோலோன்	,, 1–0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.) 4, Hospital St., **Calcutta 13.**

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றும் பாகம் ,, ரூ. 2.

(தபாற் செலவு அணா 10.)
முன்பணம் அனுப்பவேண்டும்.
V. P. P. அனுப்புவது கிடையாது.

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்

தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்.

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை.



ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால் கேசத்துக்குப் பதில் அடித்தலையே புலப்படும்.

எந்தக்காரணத்தால் உதிர்ந்தாலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தல் இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி.
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,
''ஆச்ரமம்'', க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

ச்யாமா சாஸ்திரி க்ருதிகள்

ச்யாமா சாஸ்திரியின் க்ருதிகளையும், அவர்களுடைய பரம்பரையினர்களின் க்ருதிகளையும், அவருடைய கொள்ளுப்பேரனிடமிருந்து வாய் பாட்டாக கற்றுக் கொண்டு, வீணையில் வாசித்த ஸ்ரீமதி எஸ். வித்யா. பி. ஏ. எல். டி. ஸரிகம நொடேஷனில் ஸ்வரப்படுத்தி எழுதிய மூன்று வால்யூம்கள் வெளிவந்திருக்கின்றன. மொத்தம் 244–பக்கங்கள் 9 "x11" ச்யாமா சாஸ்திரிகள் இயற்றிய க்ருதிகள் 42. சுப்பராய சாஸ்திரி இயற்றியவை 11. அண்ணுசாமி சாஸ்திரி இயற்றியவை 8. மூன்று வால்யுங்களின் மொத்த விலை ரூ 12–0–0 பெதர்வெய்ட் பதிப்பு ரூ 13–8–0.

தமிழ், தெலுங்கு, சம்ஸ்க்ருதம் இவைகளில் சாஹித்யமும், சம்ஸ்க்ருதம் தமிழில் ஸரிகம ஸ்வரங்களுடன் வீணை கமகங்களும், குறிப்பிட்டிருக்கின்றன. ராக பாவத்தை வெளியிடும் கமகக் குறிகளின் விவரம் முதல் வால்யுமில் ஆங்கிலத்திலும் மூன்ருவது வால்யுமில் தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது. தீக்ஷிதரைப்பற்றிய சங்கீத சாம்ப்ரதாய ப்ரதர்சனைக்குச் சமமானது. திருவாங்கூர் தர்பாரைச்சேர்ந்த சங்கீத பள்ளிகளில் உபயோகிக்கப்படுவது. கிடைக்கும் இடம்: 46. எட்வர்ட் எலியட் ரோட், மைலாபூர். மதராஸ் 4. ரிஜிஸ்திரேஷன் தபால் செலவு தனி.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை



ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி...சேலம்

பிரசித்திப் பெற்ற

"காஸினோ"

முகப் பவுடர்.

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச் செய்கிறது.

'வாங்கும் பொழுது காஸினோ லேபிளைப்பார்த்து வாங்குங்கள்

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1

ஸ்ரீமத்பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயராய் இருந்த கீர்த்தனசார்ய

ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பி. ஏ. எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப் பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

★

எமது எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ் செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

★

புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.

மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆடிமீ 10உ ★ 1948-௵ ஜூலைமீ 25உ No. 26

ஜமீந்தாரி ஒழிப்பு மசோதா

ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாபற்றி ஆரம்ப முதல் இதுவரை நடந்துள்ள விவாதம் கண்டு சென்னை சர்க்கார் பெருமை பாராட்டிக்கொள்ள முடியாது. சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் சமீப கூட்டத்தில் ரெவினியூ மந்திரி இதுபற்றி பேசிய தோரணையும், கொண்டு வந்த தீர்மானமும் எங்கும் திகைப்பையே உண்டாக்கும். பிடிவாதத்தில் இதற்கு இணை வேறிருக்க முடியாது. "திருத்த முன்வருவோர் காங்கிரஸ் மேலதிகாரிகளாயிருந்தாலென்ன? இன்னும் யாராயிருந்தால்தானென்ன? நாங்களா திருந்துவோம்!'' என்ற உணர்ச்சியே அம்மந்திரியின் ஒவ்வொரு வார்த்தையிலும் தொனிக்கிறது.

இம்மசோதாவில் இனாம்கள் பிரச்னையையும் பிணைத்தது ஒரு அடிப்படையான தவறு. ஏனெனில் ஜமீன்கள் ஏற்பட்ட வகையும் இனாம்கள் தோன்றிய முறையும் முற்றிலும் வேறானவை. நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்திலாவது இனாம்களின் தனிப்பட்ட நிலைமைக்குத் தக்க மதிப்புக் கொடுத்தார்களா? கிடையாது. ஜமீன் குடிகளில் சிலரைவிடக் கேவலமான பொருளாதார நிலையிலுள்ள இனாம்தார்களுண்டு. அவர்களிடமுள்ள இனாம் நிலம் அவ்வளவு சொற்பம். இன்னும் பல இடங்களில் அசல் இனாம்தார்களிடமிருந்து நிலங்கள் அவ்வப்போதைய விலைப்படி கைமாறியிருக்கின்றன. ஆனால் இத்தகைய சந்தர்ப்பங்களைக் கவனித்து யாருக்கும் அநீதி விளையாமல் மசோதா அமையவேண்டுமென்பதில் ரெவினியூ மந்திரி அக்கரை காட்டவில்லை.

இம்மசோதாவை பல முக்கியமான அம்சங்களில் திருத்தும்படி காங்கிரஸ் மேலதிகாரிகளும் ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வந்திருக்கின்றனர். ஆனால் இந்த ரகசியம் முற்றிலும் இப்போதுதான் வெளியாகியிருக்கிறது. காங்கிரஸ் மேலதிகாரிகள் சென்னை சர்க்காருக்குத் தெரிவித்த யோசனைகளில் 15 ஏகராவுக்குக் குறைந்த நிலமுள்ள இனாம்தார்களுக்கு அந்நிலத்தின் பட்டாவைக்கொடுத்துவிடவேண்டுமென்பதும் ஒன்று. தங்களுக்கு இஷ்டமான குடியானவர்கள் மூலம் தங்கள் நிலத்தை சாகுபடி செய்யும் இனாம்தார்களுக்கும் நஷ்ட ஈடு அளிக்கவேண்டுமென்பது இன்னொரு யோசனை. இந்த ரகசியங்களை சமீபக் காங்கிரஸ்கட்சிக் கூட்டத்தில்தான் ரெவினியூ மந்திரி வெளியிட்டார். இதுவரை இவ்வுண்மை ஏன் மறைத்து வைக்கப்பட்டிருந்தது? காரணம் தேடத் தேவையில்லை இப்போது.

கடைசியாக பார்லிமெண்டரி போர்டு அறிவுறுத்திய யோசனை விஷயத்திலும் ரெவினியூ மந்திரி முதலில் மழுப்ப முயன்றது கவனிக்கத்தக்கது. மசோதாவில் 'சொற்ப மாறுதல்' செய்யவேண்டுமென்பதுதான் அந்த யோசனையென்று சமீபத்தில் அவர் குறிப்பிட்டார். ஆனால் இப்போதோ அந்த மாறுதல் மகத்தானதென்றும், அதன்படி நஷ்டஈடு கொடுப்பதென்றால் அது தற்போதைய செல்வ நிலையில் முடியவே முடியாதென்றும் கூறுகிறார். அந்த யோசனையை ஒட்டி தான்யக் குத்தகை முறைப்படி 30 ஏகராவுக்குக் குறைவாயுள்ள இனாம்தார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதாயின் மேற்கொண்டு 22 கோடி ரூபாய் ஒதுக்கியாக வேண்டுமாம். இதை ரெயின்யூ மந்திரி எப்படிக் கணக்கிட்டாரென்று தெரியவில்லை. ஆனால் இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் நியாயமாக நஷ்ட ஈடு பெற உரிமையுள்ளவர்களுக்கு அதை மறுப்பது தகுமா என்பதுதானேயன்றி அதன் மூலம் சர்க்காருக்கு எவ்வளவு செலவு ஏற்படுமென்பதல்ல. ஆனால் இதை காங்கிரஸ் மேலதிகாரிகளும் எப்படியாவது ஒப்புக்கொண்டேயாகவேண்டுமென்பதே ரெவினியூ மந்திரி கொண்டுவந்த தீர்மானத்தின் சாரம்.

ஸ்டர்லிங் ஒப்பந்தம்

இந்தியாவின் ஸ்டர்லிங் ஐவேஜிபற்றி பிரிட்டனுக்கும், இந்நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் விவரம் சென்றவாரம் வெளியாகியிருக்கிறது. இவ்விஷயத்தில் இந்தியர் வற்புறுத்தி வந்துள்ள கோரிக்கை இதன் மூலம் முற்றிலும் நிறைவேறிவிடவில்லை. எனினும் இப்பிரச்னையை பொறுத்த தற்போதைய சந்தர்ப்பங்கள் அனைத்தையும் கவனிக்கையில் இதைவிடத் திருப்திகரமானதொரு ஒப்பந்தம் உருப்பெறுவது சாத்தியமா என்பது சந்தேகம்.

முதலாவது பிரிட்டன் இந்தியாவுக்குச் செலுத்தவேண்டிய கடனில் சிறிது தள்ளிக் கொடுக்கும்படி கேட்கலாமா என்பதைப்பற்றியது. அவ்வாறு கேட்க பிரிட்டனுக்கு எவ்வித உரிமையுமில்லை, தள்ளிக்கொடுக்க இந்தியாவுக்குச் சக்தியுமில்லை. சமீபத்தில் பிரிட்டிஷ் நிதிமந்திரிக்கும், இந்தியப் பிரதிநிதிகளுக்கும் நடந்த விவாதத்தில், அவர் கடனைத் தள்ளிக் கொடுப்பதுபற்றி எந்த சமயத்திலும் பிரஸ்தாபிக்கவே இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு கேட்கத் தங்களுக்கு எவ்விதத்திலும் உரிமையில்லையென்ற உணர்வே இதற்குக் காரணமாயிருக்கலாம். எனவே ஸர் ஷண்முகம் செட்டியார் சுட்டிக்காட்டியிருப்பதுபோல சில விஷமிகள் இதுபற்றிக் கிளப்பிய புரளிகள் இதோடு சமாப்தியானதாகக் கொள்ளலாம்.

இவ்வொப்பந்தத்திலுள்ள முக்கியமான ஷரத்துகள் மூன்று. முதல் இரண்டும், பிரிட்டிஷார் இந்தியாவில் விட்டுச்சென்ற ராணுவத் தளவாடங்களுக்காகவும், பிரிட்டனிலுள்ளவர்களுக்கு இங்கிருந்து சேரவேண்டிய பென்ஷன் வகையிலும், நாம் கொடுக்கவேண்டிய பணத்தைப் பொறுத்தவை. முதல் இனத்துக்காக 132 கோடி ரூபாயும், அடுத்த இனத்துக்காக 224 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்குச் சேரவேண்டிய கடனில் (சுமார் 1550 கோடி ரூபாய்) இவ்விரு தொகைகளும் உடனேயே கழித்துக்கொள்ளப்பட்டுவிடும். இவ்விரண்டும் எவ்வளவு சிக்கலான இனங்கள், இவற்றில் உடன்பாடு ஏற்படுவது எவ்வளவு கஷ்டம் என்று சொல்லத் தேவையில்லை. ஸ்டர்லிங் கடன் பிரச்னையைப்பற்றிய இவ்விரு முட்டுக்கட்டைகளும் ஒருவிதமாகத் தீர்ந்தது திருப்திகரமே. எஞ்சியுள்ள கடனில் அடுத்த மூன்றுவருஷகாலத்தில் பிரிட்டன் இந்தியாவுக்கு எவ்வளவு செலுத்துவதென்பதைப்பற்றியது மூன்றாவது ஷரத்து.

இவ்வொப்பந்தப்படி அடுத்த மூன்று வருஷ காலத்தில் பிரிட்டன் இந்திய ஸ்டர்லிங் ஐவேஜியிலிருந்து விடுவிக்கவிருக்கும் தொகை 106½ கோடி ரூபாய். ஏற்கெனவே இவ்வாறு விடுவித்து இந்தியா பயன்படுத்திக்கொள்ளாமல் 106½-கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. எனவே இந்தியா அடுத்த மூன்று வருஷ காலத்துக்குள் 213 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஸ்டர்லிங்கை பயன்படுத்திக்கொள்ளலாம். இந்நாட்டின் தேவையை நினைக்கையில் இத்தொகை மிகவும் சொற்பம். ஆனால் அடுத்த மூன்று வருஷங்களில் நாம் செலவு செய்யக்கூடிய அந்நியச் செலாவணி இவ்வளவுதானென்பதில்லை. ஏற்றுமதிபோன்ற இனங்கள் மூலம் நமக்கு வருஷத்திற்கு 500 கோடி ரூபாய் பெறுமான அந்நியச் செலாவணி கிடைத்து வருகிறது. ஆகவே அடுத்த மூன்று வருஷங்களில் மொத்தம் சுமார் 1700 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை நாம் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துக்கொள்ளலாம்.

பிரிட்டனிடமிருந்து இன்னும் அதிகமான ஸ்டர்லிங் பெறவழிசெய்திருக்க வேண்டுமென்று சிலர் வாதிக்கக்கூடும். ஆனால் ஏற்கெனவே ஒதுக்கிய ஸ்டர்லிங்கையே நாம் முற்றிலும் பயன்படுத்திக்கொள்ளக்கூடவில்லை. சென்ற வருஷம் பிரிட்டன் விடுவித்த 110 கோடி ரூபாய் பெறுமான ஸ்டர்லிங்கில் இந்தியா செலவழிக்க முடிந்தது சுமார் 4 கோடி ரூபாய் பெறுமான ஸ்டர்லிங்தான். வேண்டிய இயந்திரங்களை பிரிட்டனிலிருந்தோ, அல்லது மற்ற ஸ்டர்லிங் பிரதேசங்களிலிருந்தோபெறக்கூடாதது இதற்கு முக்கிய காரணம். தற்போதைய நிலையில் ஸ்டர்லிங் ஐவேஜியைவிட டாலர் ஐவேஜிக்கு கிராக்கி அதிகம் எனினும் இவ்வொப்பந்தப்படி முதல் வருஷத்தில் பிரிட்டன் இந்தியாவுக்கு சுமார் 20-கோடி ரூபாய் பெறுமான டாலரே ஒதுக்க இசைந்திருக்கிறது. இது மிகவும் சொற்பமேயாயினும் இயந்திரத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள இனி ஸ்டர்லிங் ஐவேஜி விசேஷமாகப் பயன்படுமென்று நம்ப இடமுண்டு.



புதிய டில்லியில் சென்றவாரம் நடைபெற்ற மாகாணப் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் இந்தியாவின் பிரதம மந்திரி நேருவும், உதவிப் பிரதம மந்திரி படேலும் வெகு தீவிர யோசனையோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் எடுத்த படம்.



மாகாணப் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொண்ட சென்னைப் பிரதம மந்திரி, பம்பாய் பிரதம மந்திரி முதலியோருள்ள படம்.



இம்மாதம் 15–ந்தேதியன்று உதவிப் பிரதம மந்திரி ஸர்தார் படேல் பாடியாலா, கிழக்கு பஞ்சாபிலுள்ள 7 சமஸ்தானங்கள் இவற்றை அங்குரார்ப்பணம் செய்தார். பாடியாலா மன்னர் முன்பாக படேல் பிரமாண பத்திரத்தைப் படிக்கிறார்.



இப்போது சென்னைக் கவர்னராயுள்ள மே. த. ஸர் நை, இந்தியாவில் பிரிட்டிஷ் ஹை கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

லாய் ஹெண்டர்ஸன் இவர். அமெரிக்காவின் சார்பாக இந்தியாவில் நியமிக்கப்பட்டிருக்கும் தூதர். டாக்டர் கிராடிக்குப் பதிலாக இப்பதவியை ஏற்கிறார்.



11

காதலும் பக்திக் காதலும்

★

பி. ஸ்ரீ.

'விரும்பியதையெல்லாம் விரைந்தளிக்கும் கற்பக விருட்சத்தின் பூங்கிளையோ? இப்பூங்கொம்பாகிய கரத்தால் நாம் விரும்புவதை விரும்பும் வண்ணம் வழங்க வந்திருக்கிறதோ?' என்ற அதிசயம் முதன் முதல் உண்டாகிறது. பிறகு 'காமன் தன் பெருவாழ்வோ?' என்று அதிசயிக்கிறார்: இவருள்ளம் தெரிந்துவிடுகிறதல்லவா இப்போது? 'புண்ணியத்தின் புண்ணியமோ?' என்று அதிசயத்திற்கு மேல் அதிசயம் ஏற்படுகிறது. அப்பால் 'மேகம் சுமந்து. வில்லும் நீலக் குவளையும் பவளமும் மலரும் சந்திரோதயமும் எல்லாம் ஒன்றாய்ப் பூத்திருக்கும் ஓர் அதிசயப் பூங்கொடியோ?' என்கிறார். அப்பாலும், இப்பாலும் மனோபாவம் ஓடப் பார்த்துத் திணறித் திகைத்து வேறு ஒன்றும் தோன்றாமல் 'அற்புதமோ?' என்று அதிசயப்படுகிறது. காதலரின் அற்புத உலகம்தான் இது—ஐயமில்லை.

ஆறு ஐயங்கள்

இனி இந்தக் காதலரின் அதிசய ஐயங்களைப் பார்த்துவிடுவோம் பாடல் வாயிலாகவே;

'கற்பகத்தின் பூங்கொம்போ?
காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதி பூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ?
அறியேன்' என்று அதிசயித்தார்.

[காமன்–மன்மதன். பொற்பு–அழகு. புயல்-மேகம். மதி–சந்திரன். விரைக்கொடி-வாசனையுள்ள பூங்கொடி.]

காணாத காட்சி கண்டு அதிசயம் அடைவது காதலர் உலகில் இயற்கைதான். கூந்தலை மேகமென்றும். புருவத்தை வில்லென்றும், கண்ணைக் குவளை மலர் என்றும் பாராட்டுவதும், பவள வாயும், மதி முகமும் மலர்மேனியும் கொடியிடையும் கண்டு அதிசயிப்பதும், காதலர் இயல்புதான். ஆனால் ஐயங்களின் சிகரமாகக் காண்கிறது சிவனருளோ என்ற அதிசயம்.

ஏழாவது ஐயம்

சரி, காதலர் இருவரும் சிவனருட் செல்வர்கள். இருவர் அகத்திலும் சிவம் என்னும் அருளொளி திகழ்கின்றது. காதலியின் அருளொளி—பக்தியொளி வயதுவந்த அந்தக் கன்னி–அழகினூடு மிளிர்ந்து, 'சிவனருளோ?' என்று சிவநேசரான காதலரை நினைக்கச் செய்துவிட்டது. அந்தச் சிவ ஒளியுடன் திகழும் செவ்விய மேனியை 'மணிவிளக்கோ?' என்றும் வியக்கிறார் காதலர். எத்தகைய மணிவிளக்கு!

ஓவியத்திலும் எழுதவொண்ணாத மணி விளக்கு.—'நான்முக ஓவியனும் எழுதவொண்ணாத மணிவிளக்கு' என்று அதிசயிக்கிறார். இல்லறத்திற்கு இசைந்த மணிவிளக்கு இக்காதலருக்கு.

சொல்லோவியம்

இப்படி அதிசயித்த வண்ணம் இடம் பெயராது தாமும் ஓவியமாக நின்றுவிடுகிறார். இத்தகைய காதலருக்கும் காதலிக்கும் இடையே வந்து நிற்கிறாராம் ஒருவர்—ஒரு சண்டைக்காரர். இவர் யார்? இந்த 'ஆசாமி'யை

நடு நின்றார் படைமதனார்

[படை—போர் தொடுக்கும் ஆயுதம். மதனார்—மன்மதன்.]

என்று தெரிவிக்கிறார் ஆசிரியர். கையிலுள்ள பொல்லாத கொலைக் கருவியுடன். இரண்டு காதல்—ஓவியங்களுக்கிடையே போர் தொடுக்கப்படை தாங்கி நிற்கிறதாம், ஒரு அழிந்த மன்மத ஓவியம்.

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்

என்று கம்பன் வருணிப்பது போல், காதலர் நோக்கக் காதலியாகிய

பரவையாரும் கண்டார்

என்று வருணிக்கிறது பெரிய புராணம்:

ஆம், சேக்கிழாரின் சொல்லோவியம்தான் இந்தக் காதற் காட்சி.

காதலி, திருவாரூரில் 'ருத்திர கணிகையர்' என்ற 'தேவதாஸி' மரபில் தோன்றிய பரவையார்தான்: பெயருக்கு ஏற்றபடி ஓர் அழகுக் கடல். காதலர், நாவலூரில் ஆதிசைவமரபில் தோன்றிய நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள்: சுந்தர புருஷர் இவர்களுடைய காதல்-வரலாறு பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தில் 'மெய் விளங்கிய அன்பர்களின் வரலாறுகளுக்கெல்லாம் பீடிகையாக விளங்குகிறது.

சந்திப்பு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் தங்கிச் சிவபெருமானை வழிபட்டு வரும்போது ஒருநாள் கோயிலுக்குப் பக்கத்தில் பரவையாரைச் சந்தித்தார். அப்போது பரவையார் கோவிலுக்கு வந்துகொண்டிருந்தார். இருவரும் அருட்செல்வத்திற்கும் அழகுச் செல்வத்திற்கும் ஒருங்கே பேர் போனவர்களல்லவா?

கண்கொள்ளாக் கவின்பொழிந்த
திருமேனி கதிர்விரிப்ப
விண் கொள்ளாப் பேரொளியான்

[கவின்-அழகு. கதிர்-கிரணம்.] என்று சுந்தரமூர்த்தி சுவாமியை -சுந்தரிக்கு இசைந்த சுந்தரரை- வருணிக்கிறார் சேக்கிழார். தம்மை நோக்கிய இவரைத் தாமும் எதிர் நோக்கு நோக்கியதும் பரவையாருக்கு நாணம் முதலான பெண்மையுணர்ச்சிகள் தோன்றின.

'யார் இவர்? முருகனோ? மன்மதனோ? மந்திர ஜாலம் புரியும் வித்தியாதரனோ?' என்று பரவையாருக்கும் அதிசயமான ஐயங்கள் உள்ளத்தில் எழுகின்றன. 'சிவனருளோ?' என்று நம்பி ஆரூரருக்கு ஏற்பட்ட சந்தேக-சிகரம் இவருக்கும் ஏற்படுகிறது;

'மின்நேர் செஞ் சடையண்ணல்
மெய்யருள் பெற்றுடைய
வனோ?
என்னே! என் மனம் திரித்த
இவன்யாரோ?'என நினைந்தார்

[மின்நேர்-மின்னலை ஒத்த. செஞ்சடை அண்ணல்-சிவபெருமான்.]

பரவையார் என்ற அழகுக் கடலும் திரிந்தது. மோர்ப்பிரை விழுந்த பால்போல காதல் வசப்பட்ட போதிலும் பக்தியில் சிறந்த பரவையார் கோவிலுக்குள் புகுந்தார்.

சுந்தரர் காதல்

நம்பியாரூரர் அங்கிருந்தவர்களை விசாரித்து அவள் யாரென்பதை அறிந்துகொண்டார். மாலையாகி இரவு வந்தது. இரவாகிய நங்கை புன்முறுவல் செய்தது போல் வெண்ணிலவும் வந்தது:

நறுமலர்க்கங்குல்
நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன,
முகிழ்ந்தது வெண்ணிலா.

[கங்குல் நங்கை-இரவாகிய நங்கை.]

வெண்ணிலவு பேரொளியாக வீசுகிறது,

நீற்றின் பேரொளி
போன்றது நீள்நிலா

[நீற்றின்-திருநீற்றின்.]

அப்போது நம்பியாரூரரின் நிலையை வருணிக்கும்போது ஆசிரியர்,

நாவலூரரும்,
நங்கை பரவையாம்
பாவை தந்த
படர்பெருங் காதலும்,
ஆவி சூழ்ந்த
தனிமையும் ஆயினர்

[நாவலூரர்-திருநாவலூரில் தோன்றிய நம்பியாரூரர் என்கிறார்.]

மற்றக் காதலர்களை வருத்துவதுபோல் வெண்மதியும் குளிர் பூந்தென்றலும் நம்பியாரூரர் மீதும் நெருப்பை வீசுகின்றன. தென்றலும் அழல் வீசுவது கண்டு திகைத்து;

மறம்பயின்றதெங்-
கோ? தமிழ் மாருதம்!

[மறம்-(இங்கே) பாவச்செயல் பயின்றது-பழகியது. எங்கோ-எங்கேயோ? மாருதம்-தென்றல்.]

என்று அந்தத் தென்றலையே கேட்கிறார் நம்பியாரூரர். 'தமிழுடன் பழகிய தென்றல் பாவச் செயலுடன் பழகுவதற்கு எங்கே, எப்படிச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கக்கூடும்? சிவமணமும் தமிழ் மணமும் கமழும் பொதிகை மலையில் பிறந்து வந்து நீர்நாடாகிய சோழநாட்டிலே வயல்கள் சூழ்ந்த தடாகங்களில் பழகியும் இப்படிக் கொதிக்கும் வெம்மை எப்படிக் கிடைத்தது'? என்று அதிசயிக்கிறார்.

காதலும் சிவனருள்

பரவையாரும் நம்பியாரூரரை இன்னாரென்று தோழிமூலமாகத் தெரிந்துகொண்டார். பேர்பெற்ற சிவனடியார் என்று தெரிந்துகொண்டதும் பரவையாருக்கும் காதல் அதிகரிக்கிறது; கடல் போலப் பெருகிவிடுகிறது. இருவருக்கும் மணம் நடைபெறுகிறது. அன்பர்கள் வேண்டியவற்றை வேண்டியவாறு அளிக்கும் சிவபெருமானின் திருவருளால் நம்பியாரூரரும் பரவையாரும் மணஞ்செய்துகொண்டு இன்பவாழ்வு வாழ்கிறார்கள். இந்த இன்ப வாழ்விலிருந்து பக்திப்பெருவாழ்வும் பெருகுகிறது. கொந்தளித்த காதல் சாந்தமான பக்திப் பெருங்காதலோடு கலந்து, பேரின்பப் பெருவாழ்வில் சங்கமிக்கிறது.

சீர்திருத்தப் புராணமா?

அந்தணரான நம்பியாரூரர், ருத்திர கணிகையான பரவையாரோடு, **சங்கிலியார்** என்ற வேளாளப் பெண்ணையும் மணந்து கொள்கிறார். அந்த மணமும் சிவபெருமான் திருவருளாலேயே நடைபெறுகிறது. நம்பியாரூரரைத் 'தம்பிரான் தோழர்' என்று சிறப்பித்துப் பேசுவதுண்டு.

அந்தண குலத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணை இவருக்கு மணஞ் செய்விக்கவேண்டுமென்று தான் இவர் தந்தையார் தீர்மானித்திருந்தார். காப்பணிதல் முதலிய சடங்குகளும் செய்யப்பட்டன. நம்பியாரூரர் மணக்கோலத்தில் மணப்பந்தலில் அமர்ந்திருந்தார். எனினும் சிவபெருமான் அந்த மணத்தைத் தடுத்துவிட்டாராம். அதைத் தடுத்து பரவையார் என்ற ருத்திர கணிகையையும், சங்கிலியார் என்ற வேளாளப் பெண்ணையும் இந்த அந்தணருக்கு மணஞ்செய்வித்தாராம், இது என்ன, பெரிய புராணமா, சீர்திருத்தப் புராணமா?

நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையங்கிரியில் ஆலால சுந்தரர் என்ற பெயருடன் தொண்டு செய்துகொண்டிருந்த காலத்தில் உமையம்மையாரின் தோழிகளான அநிந்திதை, கமலினி என்பவர்களைக் காதலித்தாராம். அவர்களும் அவரைக் காதலித்தார்கள். அந்தப் பெண்களே பரவையார் சங்கிலியாராகப் பிறந்ததாகவும், ஆலால சுந்தரர் நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளாய் பிறந்ததாகவும், கைலையில் தொடங்கிய காதல்—நாடகம் தமிழ் நாட்டில் தொடர்ந்து நடைபெற்றதாகவும் பெரிய புராணம் தெரிவிக்கிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காதலுக்கும் பக்திக் காதலுக்கும் ஒருங்கே அருள் செய்தார் சிவபெருமான் என்பதைப் பெரிய புராணம் வற்புறுத்துகிறது. மணிவாசகப் பெருமான்,

பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காணேடி!

என்று பாடும் சிவபெருமான் தடுத்து ஆட்கொள்ளும் அதிசயங்களை யாரே அறிவர்? 'சிவனருளோ? அறியேன்' என்று அதிசயித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்போல்,

வேத சிகையும்,
விரிகலையும், மெய்யன்பர்
போதமும்

'எல்லாம் அந்த அருட்பெருங் கடலை—அவன் தடுத்து ஆட்கொள்ளும் திருவிளையாடல்களை—அறியோம், அறியோம்!' என்று தான் அதிசயித்தவண்ணமிருக்கின்றன.

மகாத்மாவின் நினைவு எப்போதும் நிலவவேண்டுமென்ற எண்ணத்தோடு $1\frac{1}{2}$ அணா, 12 அணா ரூ 10 ஸ்டாம்புகளை இந்தியத் தபால் இலாகாவில் தயாரித்துள்ளனர். ஆகஸ்ட் 15உ வெளியிடப்படும் இவை.



புதிதாகக் கவர்னர் ஜெனரல் பதவியைத் தாங்கிய ராஜாஜி முதன் முதலாக பொது வைபவத்தில் கலந்துகொண்டது டில்லி நகரசபை உபசாரத்தில்தான். பண்டித நேருவும் இதில் கலந்துகொண்டார். ராஜாஜியும், நேருவும் அவ்விழாவில் அளித்த தோற்றம்.

தாங்க்ஸ் மகாமந்திரம்!

-ஜெயராம்-

பெவர்லீ நிக்கல்ஸ் என்னும் அமெரிக்க அறிவாளி இந்தியா தேசமெங்கும் சுற்றிப்பார்த்தார். இந்திய மக்களின் நடை உடை பாவனைகளையும், கலாசாரங்களையும், பண்பாடுகளையும் குற்றங் குறைபாடுகளையும் நன்கு புரிந்து கொண்டார். அதாவது புரிந்து கொண்டதாக நினைத்துக்கொண்டார்! எழுதினார் தன் "தீர்ப்பை." "தாங்க்ஸ்" என்னும் ஆங்கிலச் சொல்லைக் குறிக்கக்கூடிய சொல்லே இந்திய மொழிகளில் கிடையாதாம். சமுதாய வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் நாஸூக்காகவும், நாகரிகமாகவும் நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்வதற்கென்றே ஏற்பட்ட இந்த "தாங்க்ஸ்" என்னும் சொல் இந்திய மொழிகளில் இடம் பெறாதது இந்திய மக்கள் சமூகப் பண்பாட்டில் எவ்வளவு தூரம் பின்தங்கி இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது என்ற முடிவிற்கு வந்தார்.

ஆஹா! இந்த "தாங்க்ஸ்" என்னும் மகாமந்திரமானது எவ்வளவு ஸந்தர்ப்பங்களில் உச்சாடனம் செய்யப்படுகிறது! பள்ளிக்கூடத்தில் படிக்கும் பாலர் முதல் பென்ஷன் வாங்கும் கிழவர் வரை இந்த "தாங்க்ஸ்" மந்திரத்தை சமயம் வாய்த்தபோதெல்லாம் பிரயோகம் செய்யாதவர் இல்லை. குழந்தைகளுக்குக்கூட அந்த மந்திரத்தை எந்தெந்த சமயங்களில் ஜெபிக்க வேண்டுமென்று உபதேசம் செய்கிறார்கள். என் நண்பர் ஒருவர் தன் மூன்று வயதுச் சிறுமியை அழைத்துக் கொண்டு என் வீட்டிற்கு வந்தார். குழந்தையின் கையில் நான்கு சாக்லட்டுகளைக் கொடுத்தேன். "மாமாவிற்கு "தாங்க்ஸ்" சொல்லம்மா" என்றார் குழந்தையின் தந்தை.

பந்தியில் சாப்பிட்டு எழுந்தவுடன் நாம் கையை அலம்பிவிட்டு நமக்குப் பிறகு கையலம்ப வருகிறவருக்குச் செம்பில் ஜலம் மொண்டு கொடுத்தால் அதற்கு அவர் வாயால் ஒரு தாங்க்ஸ்"! சந்தனப் பேலாவைக் கிட்ட நகர்த்தினால் அதற்கு ஒரு "தாங்க்ஸ்." பௌண்டன் பேனாவை ஒரு நிமிஷத்திற்கு இரவல் வாங்கினால் அதற்கு ஒரு "தாங்க்ஸ்." மறுபடி ஒரு நிமிஷத்தில் பேனாக்காரரிடம் பேனாவைத் திருப்பிக் கொடுக்கும்பொழுது அதற்கு ஒரு "தாங்க்ஸ்." அதைத்திரும்பவும் வாங்கிக்கொள்பவரிடமிருந்து ஒரு "தாங்க்ஸ்" எதற்கு! பேனாவை எடுத்துக்கொண்டு நழுவி விடாமல் திருப்பிக் கொடுத்ததற்காகவா! "தாங்க்ஸ்" யாருக்குச் சொல்லப்படுகிறதோ அவர்கள் உடனே "நோ மென்ஷன்" என்ற பிரதி மந்திரத்தை அக்னியாஸ்திரத்திற்கு வருணாஸ்திரம் பிரயோகிப்பது போலவும் நாகஸ்திரத்திற்கு கருடாஸ்திரம் பிரயோகிப்பது போலவும் உச்சாடனம் செய்யவேண்டும். இந்தச்சொல்லை கடைசி தொனியாகிற "ஷன்" மட்டும் காதில் விழும்படி உச்சரித்தால்கூட முழு மந்திரத்தையும் ஜபித்த பலப்பிராப்தி லபிக்கின்றது என்று நாகரீகத்தின் சிகரத்தை யடைந்தவர்களின் சித்தாந்தம்! எலக்டிரிக் டிரெயினுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் ஒரு நவ நாகரீக நாரீமணியின் கைக்குட்டை தவறியோ அல்லது "தவறாமலோ" கீழே விழுந்தால் அதை எடுத்துக் கொடுக்கும் காலேஜ் மாணவன் காதுகளில் அந்த ஆரணங்கின் "தாங்க்ஸ்" என்ற கிள்ளை மொழியானது "இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்றவாறு தொனிக்கும்!

ஸிகரெட் பாக்கட்டைப்பிரித்து ஒருவர் நம் அருகில் நீட்டினால் அதில் ஒரு ஸிகரெட்டை உருவிக் கொண்டாலும் "தாங்க்ஸ்" கூற வேண்டும் அல்லது நாம் "ஸிகரெட்" பழக்கம் தெரியாதிருந்து ஸிகரெட் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் "தாங்க்ஸ்" கூறவேண்டும்! ஸிகரெட்டை எடுத்துக் கொண்டு "தாங்க்ஸ்" கூறினால் அந்த "தாங்க்ஸ்" ஸிகரெட் கொடுத்ததற்காக வென்று அர்த்தம். ஸிகரெட் எடுத்துக்கொள்ளாமல் "தாங்க்ஸ்" கூறினால் அந்த "தாங்க்ஸ்" ஸிகரெட் கொடுக்க வந்ததற்காகவென்று தாத்பர்யம்! சிலர் இந்த இரண்டாவது ஸந்தர்ப்பத்தில் "நோ, தாங்க்ஸ்" என்று கூறவேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இதில் "நோ"வையும் "தாங்க்ஸ்"—ஐயும் சேர்த்துக்கூறிவிட்டால் பொருள் விகாரப்படுகிறது.





ஆங்கில மொழியில் பயிற்சியில்லாதவர்கள்கூட இந்த மூல மந்திரத்தைக் கற்றுக்கொண்டு தேவையான ஸந்தர்ப்பங்களில் உபயோகிக்கத் தவறுவதில்லை. தவறி உபயோகிப்பதும் உண்டு. புதிதாக இந்த மந்திரத்தை உபயோகிக்கக் கற்றுக்கொண்ட ஒருவர் சென்னையில் டிராமில் நின்றுகொண்டு பிரயாணம் செய்யும்பொழுது லாடம் அடித்த பாதரக்ஷைகளுடன் சோபிக்கின்ற தன் பாதங்களால் டிராமில் உட்கார்ந்திருப்பவரின் கால் விரல் நுனிகளைக் கொஞ்சம் விசேஷமாகவே மிதித்துவிட்டுத் "தாங்க்ஸ்'' என்றாராம். எதற்காகத் தாங்க்ஸ்! உட்கார்ந்திருந்தவர் தன் காலை அவருடைய பாதங்களுக்கு அடியில் மிதிப்பதற்குக் கொடுத்து உதவியதற்காகவா!

வெகு கோபமான ஸந்தர்ப்பத்தில் இந்த மந்திரத்தைச் சில ஸமயம் உச்சரிப்பதும் உண்டு. காலேஜ் மாணவர் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்யும்பொழுது ஒருவன் தன் எதிராளியை "உனக்கு இந்த "ஸப்ஜெக்டைப்'' பற்றி என்ன தெரியும்? நீ வாதம் புரிவதற்கே அருகன் அல்ல'' என்று கூறிவிட்டால் எதிராளி "தாங்க்ஸ் என்று சொல்லிவிடுவான். அதாவது தன்னைத் தன் நண்பன் அவ்வளவு கேவலமாக மதித்ததற்காக வஞ்சப் புகழ்ச்சியாக அவனுக்குத் "தாங்க்ஸ்'' என்று கூறி, மட்டம் தட்டுவதாக அர்த்தமா!

ஆங்கிலத்திலுள்ள இந்தச் சொல்லை உபயோகிக்க விரும்பாத சிலர் இதற்குப் பதிலாகத் தமிழில் "வந்தனம்'' என்றோ ஹிந்தியில் "மேர்பானி'' என்றோ கூறுவதும் உண்டு. ஆனால் இந்த இரு பதங்களும் எழுத்து வழக்கில் சரியாகக் காணப்பட்ட போதிலும் பேச்சு வழக்கில் அந்த ஆங்கிலச் சொல்லைப்போல் அவ்வளவு ஸ்வாதீனமாயும், லாகவமாயும் வருவதில்லை.

இந்த "தாங்க்ஸ்'' மந்திரத்தைக் கற்றுக்கொள்ளு முன் இந்தியர்களாகிற நமக்குப் பண்பாடு இல்லையென்றா அர்த்தம்? அப்படியானால் இந்த மஹா மந்திரத்தை உபயோகிக்காதவர்களெல்லாம் காட்டுமிராண்டிகளா? இந்தச் சொல்லைக் குறிக்கக்கூடிய சரியான வார்த்தையொன்று இந்திய மொழிகளில் இருப்பதாகத் தெரியவில்லை என்ற காரணத்தைக் கொண்டு இந்தப் பதத்தை உபயோகிக்கக்கூடிய பண்பாடு இந்தியர்களிடம் இருக்கவில்லை என்றல்லவோ நிக்கல்ஸ் துரை கூறிவிட்டார்? அப்படியானால் பாபம் என்ற சொல்லிற்கு "ஸின்'' என்ற ஆங்கிலப் பதம் மாத்திரம் இருக்கும்பொழுது புண்யம் என்ற சொல்லிற்குச் சரியான ஆங்கிலப் பதம் இருப்பதாகத் தெரியவில்லை என்ற காரணத்தைக் கொண்டு ஆங்கிலேயர்கள் செய்வது முழுதும் பாபமேயொழியப் புண்யம் ஒரு விராகனிடைகூடக் கிடையாது என்று கூறிவிடலாமா!

பேச்சு வழக்கிலேயே பண்பாட்டையும் நாகரிகத் தேர்ச்சியையும் குறிக்கும் தன்மை இந்திய மொழிகளில் பெரும்பாலும் அவைகள் பேசப்படும் தொனியிலும் பேசுவோரின் முகபாவத்திலும் அதற்கு அனுகுணமான செய்கைகளிலும் இருக்கிறதேயொழிய அந்தந்தச் சொற்களின் அகராதிப் பொருள்களைப் பொறுத்து இல்லை. ரயிலில் போகும்பொழுது அருகில் இருப்பவர் மேல் தம் கால்கள் பட்டுவிட்டால் உடனே அவரைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொள்ளும் பழக்கம் இன்னும் நம்மவரில் பெரும்பாலோரிடம் இருந்து வரு



கிறது. இந்தச் செய்கைக்கு என்ன பொருள்? "தங்களுடைய உடல் என் கண்களுக்கு நிகரானது. அதைத் துன்புறுத்திவிட்டேனே" என்று காலால் தொட்டவர்கள் பிழைக்காக அங்கலாய்ப்பதைச் சமிக்ஞையின் மூலம் காண்பிப்பதே இந்தச்செய்கையின் அர்த்தம். இது பண்பாடா? அல்லது காலை மிதித்து நசுக்கிவிட்டு 'ஸாரி' என்று கூறுவது பண்பாடா?

நம் குழந்தைகளைப் பாருங்கள். அவை தன் தந்தையை ஒரு புது பொம்மைவாங்கித் தரும்படியோ அல்லது அன்று மாலையில் வெளியே உலாவச்செல்ல அழைத்துப் போகும்படியோ கேட்கும்பொழுது அவர்களுடைய பேச்சின் தொனியில் எவ்வளவு குழைவு இருக்கிறது! தன் தந்தையிடம் உள்ள பயம், அன்பு, மரியாதை எல்லாவற்றையும் சேர்த்து அந்தக் குழைவின் தன்மையிலே தீட்டிவிடுகின்றன அந்த இளங் குழந்தைகள். இந்தப்பண்பாடு நாம் ஆங்கில மொழியினால்தானா கற்றுக் கொண்டோம்? பள்ளிப்பயிற்சியோ, புத்தகஞானமோ இல்லாத நம் நாட்டு வயோதிக ஸ்திரீகளுக்கு உள்ள பண்பாடுஎன்னஸாமான்யமானதா? ரயிலில் ஏறி உட்கார இடம் தேடும்பொழுது 5 பேர்கள் உட்காரக்கூடிய இடத்தில் 3 பேர்கள் மட்டுமே உட்கார்ந்திருந்தால் அவர்களில் ஒருவரைச் சற்று நகர்ந்து உட்கார்ந்து கொள்கிறீர்களா? என்று இடத்திற்கு வரம்கேட்கும் தொனியில் எவ்வளவு நாஸூக்கு இருக்கிறது! அதே கேள்வியை தொனியை மாற்றிக் கேட்டால் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் கோபமூட்டும்படியாகவும் கேட்கலாம். இவ்வாறு தொனியின் மூலம் கருத்தை வெளியிடும் முறையைக் கையாளாமல் "ஐயா! தங்கள் அடியேனிடம் கிருபை கூர்ந்து நெருக்கி உட்கார்ந்து எனக்குக் கொஞ்சம் இடம் கொடுத்து உதவுகிறீர்களா?" என்று இலக்கணம் தவறாமல் அழுத்தந்திருத்தமாகக் கேட்டால் உட்கார்ந்திருப்பவர்கள் நம்மைஒருதரம் முறைத்துப்பார்ப்பார்கள். சிலர் கோபம் கொண்டு "என்ன ஐயா கிண்டலா செய்கிறீர்கள்?" என்று கேட்டாலும் கேட்கலாம்!.

சமூக வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் பழகும்பொழுது நாம் பழகும் முறையும் பண்பாட்டில் வெகு முன்னேற்றம் அடைந்துவிட்டதாகக் கூறும் மேல் நாட்டார் பழகும் முறையும் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்யாசப்படுகின்றன! உதாரணமாக நண்பரொருவர் நம்வீட்டிற்கு வந்தபொழுது அவருக்கு ஒரு டம்ளர் காபி கொடுத்தோமானால் அவர் அதை உடனே "கொடுங்கள் இப்படி" என்று வாங்கி அருந்திவிடுவதில்லை. நம் பண்பாட்டில் அது அநாகரிகமாகவும் கருதப்படுகிறது. அவர் "காபி வேண்டாம் ஸார்! இப்பொழுதுதான் சாப்பிட்டு வருகிறேன்" என்று மரியாதையாகவும் உபசாரமாகவும் மறுக்கிறார். இல்லை என்று கட்டாயப்படுத்திச் சாப்பிடச்சொல்கிறோம். பிறகு அவர் "நீங்கள் காபி சாப்பிட்டாய் விட்டதா?" என்று கேட்டுவிட்டுப் பிறகு காபியைப் பருகுகிறார். நம் குழந்தை அருகில் இருந்தால் அதையும் "நீ காபி சாப்பிட்டாயா?" என்று கேட்கிறார் அல்லது அதற்குக் கொஞ்சம் கொடுக்கிறார். இந்த முறையில் உபசாரமும் எதிர் உபசாரமும் ஸங்கோஜமும் பிரதி ஸங்கோஜமும் நம்மிடையே அளவுக்கு மீறியே இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். மேல் நாட்டாரிடம் இதை எதிர் பார்க்க முடியாது. அவர்கள் முறை "பிஸினஸ் லைக்" (காரியபூர்வமானது) தான். தனக்கு இஷ்டமிருந்தால் "தாங்க்ஸ்" என்று கூறிக் காபியைப்பருகுவான்; இல்லாவிட்டால் "நோ தாங்க்ஸ்" என்று கூறி வெட்டொன்று துண்டிரண்டாக முடித்து விடுவான்!.

மனப்பூர்வமான அன்பென்னும் பாசப்பிணைப்புடனும் சிறந்தபண்பாட்டுடனேயும் வாழவேண்டுமானால் அதற்கு "தாங்க்ஸ்" "ஸாரி" என்ற மந்திரமும் உப மந்திரமும் தேவையில்லை. இருந்தபோதிலும் இந்தக்கட்டுரையைப் பொறுமையுடன் படித்ததற்காகத் தாங்க்ஸ்! பழக்கம் யாரை விட்டது!



நாமொன்று நினைக்க—

ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.

மதுரப்பாட்டி வந்திருந்த ஸ்திரீயின் அந்தஸ்து, பிள்ளை குட்டிகள், உறவினர்கள், குணம், குற்றம் குறைகள், இந்த வீட்டுடன் போக்குவரத்து முதலிய விஷயங்களை எடுத்து இடைவிடாமல் உபன்யஸித்துக்கொண்டிருக்கும்போது மாமா சிவராமன் இரண்டு மூன்று தரம் வெற்றிலை புகையிலை போட்டு முடித்துவிட்டு நாற்காலியில் வந்து அமர்ந்தார். அந்த அம்மாள் பக்கத்துத் தெருவில் இருப்பவள். சுருக்கமாய்ச் சொன்னால், ஸீதாராமனை ஒரு வரனாக உத்தேசித்து விசாரிக்க வந்திருந்தாள். மதுரப்பாட்டி பெயரில் மதுரமே ஒழிய சுபாவத்தில் மதுரமல்ல. மாமா சிவராமன் ஸீதாராமன் வீட்டிலிருப்பதைப்பற்றிச் சங்கரி அம்மாளிடம் ஆக்ஷேபித்ததை அவள் அறிவாளாதலால், பதமறிந்து பேசலானாள்.

“ஏதோ அவனுக்கு அடிக்கிறது அதிர்ஷ்டம்; ஊரில் உட்கார்ந்தால் சாப்பாட்டிற்கு வழி கிடையாது. இங்கே அதிகாரி அவன்தான். படிப்பும் உயர்கிறது. நாளைக்கு உத்யோகமும் ஆகிவிடும். வீட்டிலேயே பிறந்த பிள்ளைக்கு ஒன்றிலும் அதிகாரம் கிடையாது, படிப்பும் மத்திமம். போக்கும் ஒருமாதிரி எனக்குத்தான் அந்தப் பிள்ளையைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கு. தனக்கு வேண்டும் வேண்டாமென்பதுகூட அதுக்குத் தெரியாது. நான் பார்த்து “ஐயோ பாவம்!” என்று இரங்கி எண்ணெய் தேய்த்துக் கொள்ளச் சொல்லவோ, வயறு நிறையச் சாதம் போடவோ, பக்ஷணப் பலகாரம் பண்ணிக் கொடுக்கவோ சிரத்தை எடுத்துக் கொண்டால்தான் உண்டு. இல்லாவிட்டால் இல்லை. ஆத்தில் அஷ்டைச்வரியமும்பொங்குகிறது. அனுபவிக்கக் கொடுத்து வைக்க வேண்டாமா? ஊரான் வீட்டுப் பிள்ளைக்கு நடக்கிறது ஆத்துப் பிள்ளைக்குக் கிடையாது. அவன் கொடுத்து வைத்தவன். பெண்ணையும்தான் கொடுத்து மாப்பிள்ளையாய்ச் செய்துவிடுவதாய் எஜமானி அம்மாள் உங்களிடத்தில் சொன்னாளே! நான் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். அம்மாவுக்கு ஒரு குணம் வந்தால் அப்படித்தான் பேசுவார்கள். உங்கள்

அக்கா சுபாவம் உங்களுக்குத் தெரியாததற்கா நான் சொல்லப் போகிறேன்? என் பிள்ளை ஒருவன் இருக்கிறான். இவனைவிட நல்ல சிகப்பு. இப்போது தலை கிராப் வைத்துக்கொண்ட பிறகு பார்த்தால் சீமை துரை மகன் மாதிரிதான் இருக்கிறான்! குணத்தில் தங்கக்கம்பி. சொன்ன சொல் தவறமாட்டான். கிழித்த கோடு தாண்டமாட்டான். அவனை எவ்வளவோ பாடுபட்டு ஹைஸ்கூலிலே ஆறு கிளாஸ் படிக்க வைத்தேன், மேலே காலேஜ் படிப்பிற்கு என்றால் அவனை

அனுப்ப முடியவில்லை. உங்கள் தமக்கையிடம் மன்றாடிக் கேட்டேன். அவனை ஆத்தில் சாப்பாடு போட்டுச் சம்பளமும் உதவிப் படிக்கச் செய்ய வேண்டும் என்று. சம்பளம் வேண்டுமானால் உபகாரம் செய்வதாய் உங்கள் அத்திம்பேர் சொன்னாராம். அவன் ஆத்தில் சாப்பிட உங்கள் தமக்கை அனுமதிக்கவில்லை. என் குழந்தையை நான் பிழைப்பிற்குப் பாடுபட வெளியே அனுப்பிவிட்டேன். இப்போது அவன் பூனாவிலிருக்கிறான். ரூ-85 சம்பளம். எனக்கு மாதம் 10, 20 அனுப்புகிறான். உடம்பை ஓடாக உழைத்து நான் இங்கு வேலை செய்கிறதற்கு ஒரு அனுதாபமும் கிடையாது. அந்த உபகாரம் எனக்குச் செய்ய மனதுவரவில்லை. ஸீதாராமனுக்கு ராஜயோகம் அடிக்கிறது. என் பிள்ளை விலை ஸீதாராமன் பெறுவானா? தெரிந்தவர்களுக்குத் தெரியும்.”

மாமா சிவராமன் எழுந்து புகையிலையைத் துப்பிவிட்டு வாயைச் சுத்தம் செய்துகொண்டுவந்து ஆழ்ந்த யோசனையுடன் கேட்டார். புகையிலையை அடக்கியிருப்பவர்கள் நினைத்ததை உடனே கேட்டுவிட முடியாதல்லவா? “காந்திமதிக்குச் சம்மதமிருக்குமோ?”

“குழந்தைகள் எதைக்கண்டது கள்? காந்திமதிக்கும் சம்பந்தந்தான். செல்வத்துக்கும் சம்மதம் தான்.”

“செல்லத்திற்கு என்ன சம்மதம்? என்ன பாட்டி, பெரியகல்லைத் தூக்கிப் போடுகிறீர்களே?” என்றார் சிவராமன் திடுக்கிட்டுப் போய். “வெந்த உள்ளத்தின்” கடிதம் அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது.

“அவனுடைய கவனம் அவளிடத்தில்தானிருக்கிறது. அவள் குழந்தைதானே.

“கவனமா?” என்று மாமா தனக்குள் சொல்லிக்கொண்டார், “பாட்டி பேசுகிறாளா, அல்லது ஒரு அசரீரி பேசுகிறதா” என்று வியந்தார்.

மாமா பாட்டியைச் சற்றுச் சிவந்த கண்களால் நேராக நோக்கி உரைக்கலானார்—

“பாட்டி! ஒருநாளும் செல்லம் அவனை மதிக்கமாட்டாள். புலிக்குப் பிறந்தது பூனையாகப் போகாது.”

"ஆனால் இல்லையோ! நான்தான் இல்லை என்று சொல்லுகிறேனே! யார் அப்படிச் சொல்லுவர்! செல்லம் கெட்டிக்காரி. அவள் சமத்தும் அவள் அழகும்-பார்த்தால் திருஷ்டியாய்ப்போய் விடும் போலே தானிருக்கிறது. ஆத்திலே ஊரான் பிள்ளையைக் கொண்டு வந்து விட்டுக்கொள்ளலாமோ?—இதுவா சமயம் அதற்கு? நன்றாயிருக்கோ இது? நீங்களும் சொல்லிப் பார்த்தேள். அவர் மனதில் படவில்லை. என்ன செய்கிறது?''

"அவனுடைய 'கவனம்' என்று ஏதோ சொன்னீர்களே, பாட்டி! அது எப்படித் தெரிகிறது?''

''பாட்டி! ஒருநாளும் செல்லம் அவனை மதிக்கமாட்டாள். புலிக்குப் பிறந்தது பூனையாகப் போகாது''

"ஆத்திலே பழகுகிற வாளுக்குத் தெரியாதா என்ன? இரண்டு நாள் முன் கூடத்தில் ஒருவருமில்லாத சமயத்தில் அவன் செல்லத்தின் ரூமில் நுழைந்தான்.''

"யாரு?''

"ஸீதாராமன்தான்! எனக்கு அவன் பெயரைச் சொல்லக்கூட வேண்டியிருக்கவில்லை.''

''செல்லம் தனியே இருந்தாளா''

'நல்லவேளையாய் அவள் இல்லை. அக்காயிதான் ரூமைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்துவிட்டு விறு விறு என்று வெளியே போய்விட்டான். அக்காயியை வேண்டுமானாலும் விசாரியுங்களேன்!''

"நான் ஒருவரையும் விசாரிக்க வேண்டாம் பாட்டி! நீங்கள் இதை உங்கள் எஜமானியிடம் சொல்லியிருக்க வேண்டாமா? உடனே அதற்குத்தக்க பரிகாரம் செய்துவிட வேண்டாமா? இரண்டு நாள் என்ன செய்தீர்கள்? நான் வரவேண்டுமென்று காத்திருந்தீர்களா?'

"எனக்குச் சொல்ல பயமாகத்தானிருந்தது. உங்களிடத்தில் தான் சுவாதீனமாய்ச் சொல்லுகிறேன். என்னுடைய போதாத காலத்திற்கு என் பேரில்தான் பாய்வார்களே ஒழிய, அவனைச் சந்தேகிக்க மாட்டார்கள்.''

"அவன் காந்திமதியிடம் இவ்விதம் இல்லையோ?''

"செல்லத்தையும், காந்திமதியையும் சேர்த்து வைத்துப் பார்த்தவர்கள் இந்தக் கேள்வி கேட்க மாட்டார்கள். நாகரிகப் பூச்சுக்கும் சுய வளத்திற்கும் வித்யாசமில்லையா? செல்லத்திற்கு அலங்காரம் செய்துவிட்டால் அவள் ராஜாத்திதானே! ஊன்றிப் பார்த்தால் காந்திமதி என்ன அழகு?—வாட்டமும், தேய்வும்-''

மதுரப் பாட்டியின் மர்மமான ஸல்லாபத்திற்கு அணைபோடப் பக்கத்துத் தெருவிலிருந்து வந்திருந்த ஸ்திரீ எழுந்துவெளியே வந்தாள். பெரிய பிரவாகத்தைத் தடுக்கவல்ல பெரிய ஆகிருதியையுடைய அந்த அம்மாள் அசைந்து வருவது பர்வதங்கள் பறக்கும் காலத்தை மாமாவுக்கு நினைவூட்டியது. அந்தஅம்மாளுக்குக் கழுத்து இருப்பது வைர அட்டிகையினால் ஊகிக்கத்தக்கதாயிருந்தது. அந்த அம்மாளின் நாலு காரட் வைர ஓலையும், துவரம்பருப்பு பிரமாணமுள்ள மூக்குப் பொட்டும், சாணக் குவியலில் வர்ணப் பூக்கள் விகஸித்ததுபோல் விளங்கின! அவள் ஒரு அதிகாரியின் மனைவி என்பது அவள் நடையிலேயே தெரிந்தது. மாமா சிவராமன் அவளுடைய உறுதியான பார்வைக்கு அஞ்சி ரூமுக்குள்

சென்ருர். மதுரம் ஜடிதியில் மறைந்துவிட்டாள். அந்த அம்மாள் தன்னைப் பார்ப்பவர்கள் தன் பெருமையைத் தவிர வேறு எதையும்பற்றிச் சிந்திக்கக்கூடியவர்களாயிருப்பார்கள் என்ற ஞாபகமேயிராமல் கம்பீரமும், கண்ணியமும் நிரம்பிப் படைக் கண்காணிப்பில் உலாவும் தளபதிபோல் சங்கரியம்மாளால் வழி கொண்டுவிடப்பட்டு வீதியை அடைந்தாள்.

சிவராமன் சங்கரி அம்மாள் திரும்பிவரும்போது சந்தித்து செல்லத்தின் விஷயத்தில் ஸீதாராமன் ஸந்தேகாஸ்தமாய் நடந்துகொள்வதாயும், அதற்குத் தக்க ருசு இருக்கிறதென்றும், அவனை வீட்டில் வைத்துக்கொள்வதானல் தான் செல்லத்தை அன்றிரவே அழைத்துக்கொண்டு ஊருக்குப் போய்விடுவதாயும், ஆக்ரோஷத்துடன் பேசினர். சங்கரி அம்மாள் ஸீதாராமனின் நடவடிக்கைகளில் ஒன்றும் சந்தேகாஸ்பதம் கிடையாதென்றும்' இந்தமாதிரி அசட்டுக் கடிதங்கள் ஏற்கனவே இரண்டொருதரம் வந்திருந்ததாய்க் குழந்தைகள் பிரஸ்தாபித்ததாயும், இதையெல்லாம் பொருட்படுத்தினல் பெண்களைப்படிக்க அனுப்பாமலிருப்பதே நலம் என்றும், விபரம் குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்த பிறகு விசாரித்துக் கேட்டு வேண்டியதைச் செய்யலாமென்றும், திடீரென்று கோபித்துக் கொள்வது தகாது என்றும், மிக்கத் திறமையுடன் சுருக்கமாய் எடுத்து விளக்கினள். சிவராமன் சீறிக்கொண்டு எழுந்து செல்லத்தின் அறையில் போய்ப் படுத்துக்கொண்டார்.

(தொடரும்)

படத்திலுள்ள மூன்று குழந்தைகளுக்கும் வயது 2. சீனுவில் நடந்த கிளப் தினத்தன்று இம் மூன்று குழந்தைகளும் அழகுப்போட்டியில் கலந்துகொள்ள கைகோத்துக்கொண்டு சென்றன.

இந்தோனேசியாவின் இளவரசி மாலியா ஸூனேரியோ ஹாலிவுட்டில் ஸினிமா நடி ஷேர்லி டெம்பிளைச் சந்தித்தார். அங்கு அவ்விருவரும் தங்களுடைய உடையின் விசேஷங்களைப்பற்றி உற்சாகமாக விவாதித்தார்கள்.

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்

இதுவரையில்...

[எட்டாம் நூற்றாண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனாபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனோ கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறான். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறார். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறார்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொறாமையுண்டாக்குகிறது.]

15
இரகசிய ஆலோசனை

'திடீரென்று அரண்மனைப் பக்கமெல்லாம் கட்டுக்காவல் அதிகரித்துவிட்டதே, என்ன விசேஷமோ?' என்று மதுரையெங்கும் ஒரே பேச்சாயிருந்தது.

'ஏண்டா வேலா! உனக்குச் சேதி தெரியுமோ? மாறு வேஷத்தில் ஏராளமாகச் சேரநாட்டிலிருந்து ஒற்றர்களும் படை வீரர்களும் வந்திருக்கிறார்களாம். அவர்கள் ஆயுதங்களையும் எங்கெல்லாமோ ஒளித்து வைத்திருக்கிறார்களாம். பளிச்சென்று அரமனையை முற்றுகையிட்டு மதுரைச் சிங்காஸனத்தையே பிடித்துக்கொள்ளப் போகிறார்களாம். அதனால் தான் இப்படி அரமனையைச் சுற்றிக் காவல் போட்டிருக்கிறார்களாம். வில்லிலே கோத்த அம்புகளுடன் சர்வ ஜாக்கிரதையாகக் காவலாளிகளும், பாண்டிப் படை வீரர்களும் கோட்டை கொத்தளங்களில் காவல் செய்து வருகிறார்களாம்' என்று கவலையோடு பேசினான் சொக்கன்.

'அப்படியெல்லாம் இருக்காதடா! ஏதோ கலவரமாய்த்தான் இருக்கிறது. ஆனால் நீ சொல்லுகிறமாதிரி அவ்வளவு ஆபத்தா மதுரைக்கு வந்திருக்க முடியும்? நம்ம மகராசா அவ்வளவு மோசமா? உலகமெல்லாம் போற்றும் உத்தம வீரர் அல்லவா?' என்று பதில் சொன்னான் வேலன்.

'அப்படியானால் இன்று எதற்காக இவ்வளவு முன் ஜாக்கிரதை அரமனைப்பக்கமெல்லாம்?'

'எத்தனையோ ராஜ காரியங்கள் இருக்குமே!'

'நேற்றுவரை இல்லாத ராஜ காரியமா இன்று இவ்வளவு தூரம் பிரமாதப்படவேணும்? எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்ற காலத்திலும் இல்லாத பாதுகாப்பு இன்று எதற்காக?'

'நமக்கேன் அந்தக் கவலை? நாம் நம் விவசாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் மகாராஜா தம்முடைய ராஜ்யகாரியத்தைப் பார்த்துக் கொள்வார்.'

'அது இருக்கட்டும். புரோகிதர் செல்வ நம்பி அவர் ஊரிலிருந்து வந்திருக்கிறாராம்.'

'புரோகிதர் வைதிக காரியங்களுக்கு வந்திருப்பார்.'

'போடா பைத்தியக்காரா! அதற்குப் புரோகிதர்கள் மதுரையில் இல்லையா? ஏதோ பெரிய ராஜகாரியமாகத்தான் வந்திருக்கவேணுமென்று பேசிக்கொள்கிறார்கள்.'

'இப்போது ஞாபகம் வருகிறது. ஏதோ ஒரு பெரிய சபை நடக்கப்போகிறது. அங்கே பெரிய பெரிய சண்டைகள் நடக்குமாம்.'

'என்ன, பொருத்தமில்லாமல் உளறுகிறாய்? சபையிலே சண்டையா? சண்டை என்றால் நான் சொன்னபடி மாறு வேஷத்திலிருக்கும் எதிரிகளுக்கும் நம்மவருக்கும்தான் நடக்கவேணும். அந்தப் பௌத்தச் சாமியார்கூட எதிரியின் உளவாளிதானும்; சண்டைபோடத் தூண்டுகிறாராம்' என்றான் சொக்கன்.

'சரி, சரி, அப்படியானால் நிச்சயமாக நான் சொன்னபடி சபைக்குள்ளே பண்டிதர்கள் தொண்டை கிழியக் கடபட வென்று மண்டைகளை உடைத்துக்கொள்ளாமலே சண்டை செய்கிறார்களே அந்தச் சண்டையாகத்தான் இருக்க வேணும். கிழவரான ஆனந்தச் சாமியார் வேறு என்ன சண்டை செய்ய முடியும்?' என்றான் வேலன்.

'ஓஹோ, பண்டிதர்களின் விவகாரமா? அதற்காக ஏற்பாடுகள்செய்வதென்றால் அரமனைப் பக்கமெல்லாம் ஏன் இந்தப்பிரமாதமான பாதுகாப்பு? நீசொல்வது பொருத்தமாயில்லையடா? ஏதோ ஒரு பெரும் புயல்காற்று அடிப்பதற்கு முன் ஆகாசம் கப்சிப் என்று இருக்கிற மாதிரி, அரண்மனைப் பக்கமெல்லாம் இருக்கிறது இன்று. பண்டிதர்களின் சபை கூடப்போகிறார்களென்றால், எங்கும் குதூகலமாக அல்லவா இருக்க வேணும்? ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து அந்தப் பெரியவர்கூட வரப்போகிறாராம்.'

இதுகேட்டதும், வேலன் கடகட வென்று சிரித்துக்கொண்டே, 'அந்தப் பெரியவரும் வில்லுங் கையுமாகத்தான் சண்டைக்கு வருகிறாரா?' என்று கேட்டான்.

சொக்கன் பதில் சொல்லாமலே அரண்மனை இருந்த திசையை உற்று நோக்கினான். அதைக் கவனியாமல் வேலன், 'பன்றிமலைப் பெரியோரும் கோஷ்டியூர்ப் பெரியவரும் ஸ்ரீ வில்லிபுத்தூர்ப் பெரியவரும் வில்யுத்தம் செய்யப்போகிறார்களா, மல் யுத்தம் செய்யப்போகிறார்களா?' என்று கேட்டான்.

அதற்கும் சொக்கன் பதில் சொல்லவில்லை; தான் பார்த்துக்கொண்டிருந்த திசையை வேலனுக்குச் சுட்டிக் காட்டினான். அங்கே யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை முதலியவை போவதை வேலனும் பார்த்துவிட்டான். பார்த்ததும் அவன் சொக்கனை நோக்கி, 'எனக்கு ஒன்றும் விளங்கவில்லையப்பா! ஏதோ திட்டப்படி அரமனைக் காரியம் நடக்கிறது. நாமும் நம்முடைய திட்டப்படி நம்முடைய வேலைக்குப் போவோம். எல்லாம் நடக்க நடக்கத் தெரியும்' என்றான்.

இப்படித் தினுசு தினுசுகளான சம்பாஷணைகள் மதுரையில் பலவேறு மக்களிடையே நடந்துகொண்டிருந்தன. அப்போது அரண்மனைக்குள்ளே இரகசிய ஆலோசனை மண்டபத்தில் அரசனும் அமைச்சரும் தளபதியும் செல்வநம்பியும் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். ஒற்றர் தலைவனான நரஸிம்மனும் கூட இருந்தான். அவன் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில்

சொல்லி விட்டு, அந்தச் சம்பாஷணையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

இந்தச் சம்பாஷணைகளின் பயனாக அரசனுக்கு நாட்டின் நிலைமை தெளிவாக விளங்கி விட்டது. சேரமன்னன் தன்னிடம் ஒரு தளபதியாகவும், ஓர் அமைச்சனாகவும் வேலை பார்க்க ஒப்புக்கொண்டிருந்தும் வாக்களித்திருந்தபடி மதுரைக்கு வந்து சேரவில்லை. தாமதத்திற்குப் பொய்க் காரணங்களை ஜோடித்து அனுப்பிக் கொண்டே இருந்தான். நோயுற்றிருப்பதாகவும், வேறு சில அவசரமான சொந்த ராஜ்ய காரியங்கள் இருப்பதாகவும் சொல்லி அனுப்பினான். ஆனால் தன் படைகளின் தொகையைப் பெருக்கிக் கொண்டே இருந்தான். போர்க்கருவிகளையும் புதிது புதிதாகத் தயாரித்துக்கொண்டிருந்தான். ஒற்றர்களையும் பௌத்த சன்னியாசிகளையும் பாண்டி நாடெங்கும் முக்கியமான பிரதேசங்களெங்கும் அனுப்பி வைத்திருந்தான். பன்றி மலையிலிருந்த போலிச் சன்னியாசிகள் பெரும்பாலும் சேரனின் உளவாளிகளாகவோ, படை வீரர்களாகவோ இருந்தார்கள். எல்லாரும் 'அனுதாபி'களாகச் சேரனுக்கு ஆதரவு அளித்து வந்தார்கள். இத்தனை காரியங்களுக்கும் நரஸிம்மன் சான்றுகள் கண்டுபிடித்திருந்தான்.

இப்படியெல்லாம் விஷயங்களைத் தெரிந்து கொண்டதும் அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான். மாறங்காரி 'மேலே என்ன செய்ய வேண்டும்?' என்பது குறித்து அமைதியாக ஆலோசிக்க எண்ணி, 'நான் இப்போது வெளியேபோய் வருகிறேன் - இன்றிரவு தங்களை நகரி சோதனையில் சந்தித்துக் கொள்கிறேன்' என்று சொல்லிப்போய் விட்டார். நரசிம்மனும் அவரைத் தொடர்ந்து சென்றான். வையையாற்றின் வடகரையில் நடைபெறப் போகும் படைகளின் அணிவகுப்பைப் பார்வையிட வேண்டுமென்று வில்லியும்போய் விட்டான்.

செல்வ நம்பி மன்னனை நோக்கி, 'ஏன் தாங்கள் கவலைப்பட வேண்டும்? பகவானை நம்பி, பக்திக்கு இதயமும் தர்மத்திற்குக் கைகளுமாய் உழைத்துவரும் தாங்களும் கவலைப்படலாமா? எங்கும் பரவியுள்ள பரம்பொருளான விஷ்ணுவை நம்பி மேலே செய்யவேண்டியவற்றைச் செய்யுங்கள்' என்றார்.

அதற்கு மன்னன், 'விஷ்ணுவை மட்டுமா, விஷ்ணுசித்தரையும் நம்பித்தான் இருக்கிறேன். ஆனால் எனக்கு இப்போது வேறு கவலை ஒன்றும் இல்லை. திருமாலிருஞ்சோலையிலிருந்து விஷ்ணுசித்தர் இங்கே வந்து சேருவதற்கு முன்பே வித்வத்சபைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடவேண்டாமா? அது ஒன்றுதான் இப்போது எனக்குள்ள கவலை. மற்றப்படி அரசியல் சிக்கல்களுக்காகவும் குழப்பங்களைக் குறித்தும் நான் கவலைப்படவில்லை. அது அமைச்சரின் தலைவலி! மாறங்

காரியின் மேதை எந்த அரசியல் நெருக்கடிகளையும் சீவிச் சிக்கறுத்து ஒழுங்கு செய்துவிடும். இதில் எனக்கு ஐயம் துளியும் இல்லை. பிரமாதமான போர் ஒன்றும் இப்போது வந்துவிடப் போவதில்லை. அப்படி வந்து எதிர்க்கக்கூடிய படை வலிமையுள்ள பகை அரசன் ஒருவனும் கிடையாது. சேரனால் ஏற்படக்கூடிய குழப்பங்களை வில்லி சமாளித்து விடுவார். ஆகவே அந்தக் கவலைகளை இப்போது விட்டு விட்டு வித்வத் சபைக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கூடிய சீக்கிரம் செய்ய வேண்டியதுதான் என்பதே இப்போது என் சிந்தனை. அதற்குத் தங்களுடைய உதவியும் ஒத்துழைப்பும்தான் தேவை' என்று பதில் சொன்னான்.

அந்தப் பதிலைக் கேட்டதும் செல்வநம்பி பூரித்துப்போனார். 'என்ன பொன்னான உள்ளம்! என்ன தீரம்! ராஜரிஷியான ஜனகரைப்போல் இருக்கிறார். விஷ்ணு சித்தருக்குப் பவித்திரமான சீடராகத் தகுதியுள்ளவர்தான்' என்று நினைத்தார். பிறகு அவர் அரசனை நோக்கி, 'தாங்கள் சொல்வது தான் சரி. அப்படியே செய்வோம். தங்களுடைய தேவியாருக்கும் இங்கே நடந்த ஆலோசனை—விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிவித்து விடுங்கள். ராணியார் கவலையையும் போக்கிவிட்டு, நாம் வித்வத் சபை விஷயமான ஏற்பாடுகளை விரைந்து செய்யலாம்' என்று சொன்னார்.

'அப்படியானால் நாம் எப்போது சந்திக்கலாம்?' என்று அரசன் கேட்டான்.

அதற்கு அரசன், 'இன்று இரவே நகர்வலம் செய்யும்போது தாங்கள் தங்கியிருக்கும் மாளிகைக்கு மந்திரியாருடனும் ஒற்றர் தலைவனுடனும் வந்து சேருகிறேன். தங்களுக்கு அசௌகரியமாக இல்லாவிட்டால் சிறிது நேரம் சம்பாஷித்துக்கொண்டிருக்கலாம்' என்று பதில் சொன்னான்.

'மிக்க சந்தோஷம். தங்களை மாறு வேஷத்தில் அந்த மாளிகையில் உள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?'

'அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். அங்கே காவலாயிருக்கும் எங்கள் படை வீரர்களுக்கு எங்கள் அடையாள வார்த்தைகள் இனிது புலனாகும். ஆனால் தங்களுடைய சீடர்களைத் தங்களிடம் அழைத்துக்கொண்டு போக வேணுமே, அதற்கென்ன செய்யலாம்?'

செல்வநம்பி சிறிது ஆலோசித்துவிட்டு, 'நீங்கள் மெள்ள,

பாரார் தொல்புகழான்
புதுவை மன்னன்

என்று வில்லிபுத்தூரரான விஷ்ணுசித்தரின் பேரையும் புகழையும் நினைப்பூட்டும் அந்த வாசகத்தைச் சொல்லுங்கள். அந்த அடையாள வார்த்தை போதும் என் சீடர்களுக்கு. உங்களையெல்லாம் உடனே என்னிடம் அழைத்து வந்து விடுவார்கள்' என்றார்.

அப்பால் மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு செல்வநம்பி, ஆலோசனை மண்டப வாசலில் தயாராக இருந்த பல்லக்கில் ஏறிக் கொண்டார். அப்போது அங்கே காத்திருந்த சீடர்களில் ஒருவன்.

உற்றவனாய்த் தென்னவனுக்(கு)
உயிர்த்துணையாய், அறம் அன்றி

என்று கட்டியம் கூறுவதுபோல் பாடத் தொடங்கினான்.

தொடர்ந்து வேறொரு சீடன்
மற்றறியா நிலையானாய்,
மறைநாலும் கற்றவனாய்,

என்று பாடினான் மூன்றாம் சீடன்,

செற்றமிலா மனத்தினனாய்,
செல்வநம்பி எனும் நாமம்

என்று தொடர்ந்து பாடினான் அதைத்தொடர்ந்து மன்னன்,

செல்வநம்பி எனும்நாமம்
பெற்றவனாய், எதுவரினும்
போராத நிலையானே

என்று பாடி முடித்தான்.

அப்போது அங்கே மூன்று சீடர்கள்தான் வந்திருந்தார்கள். செய்யுளில் மூன்று அடிகளை அம்மூவரும் ஒருவர் பின் ஒருவராகப் பாடிய பின், நாலாவது அடியை யார் பாடி முடிப்பதென்று அவர்கள் தீர்மானிப்பதற்குள், அரசனே பாட்டைப் பூர்த்தி செய்துவிட்டான். உடனே செல்வநம்பியின் பல்லக்கும் புறப்பட்டது.

* * * * *

பூசுந்தரி தேவி மேலே சொன்ன இரகசிய மந்திராலோசனையில் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை—எனினும் அரசியல்—ரகசியங்களிலும் ஒன்றையேனும் பாண்டிய மன்னன் அவளிடமிருந்து மறைத்து வைத்ததே இல்லை. அவளையும் 'உத்தியோகப்பற்றில்லாத' ஒரு மந்திரியாகவே கருதி வந்தான். அவளிடம் கலந்து ஆலோசிக்காமல் மன்னன் ஒரு முக்கிய காரியமாவது செய்வதே கிடையாது. அவளுக்



குத் தன்னுடன் அபிப்பிராயபேதம் ஏற்படுவதற்கு இடம் கொடுப்பதே இல்லை. அப்படி அபூர்வமாக ஏற்பட்டாலும், தன்னுடைய அபிப்பிராயத்தை விட்டுக்கொடுத்தாவது அவனைத் திருப்தி செய்யவே வழிதேடுவான். அவனுடைய ஆலோசனையினாலும், தோழமையினாலும்தான் அரசன் கவலையற்ற உள்ளத்துடன் பெருங்காரியங்களையும் அனுயாசமாகச் செய்து முடிக்கலானான்.

அந்த இரகசிய மந்திராலோசனை முடிந்ததும் அரசன் நேரே அந்தப்புரத்திற்கு வருவான் என்று பூசுந்தரிக்குத் தெரியும். அந்த ஆலோசனை — விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்று பூசுந்தரியின் உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. எனினும் அந்த ஆத்திரத்தை வெளிக்காட்டாமல் அமுதவல்லி முதலான தோழிகளுடன் விளையாட்டு வேடிக்கைகளில் பொழுது போக்கிக்கொண்டிருந்தாள்.

எனினும் வருணிக்கமுடியாத அந்த முக சௌந்தரியத்தில் சிந்தனைகளின் சாயை உலாவுவதை அமுதவல்லி கவனித்தாள். அடிக்கடி கடைக்கண்களும் வாசற்பக்கத்தை நோக்குவதாகத் தோன்றியது. இதழ்களில் வழக்கம் போன்ற புன்முறுவலுக்குக் குறைவில்லை; எனினும் அந்தப் புன்னகைகளில் சோகத்தின் சாயை உலாவிற்று.

ராணியின் அந்த நிலையை உற்று நோக்கிய அமுதவல்லி, ‘இனி மகாராஜா வரும் சமயமாகி விட்டது. நாங்கள் பூங்காவனத்தில் விளையாடப்போகிறோம். நீங்கள் இஷ்டமானபோது வாருங்கள்’ என்று சொன்னாள். அப்படி அவள் சொல்லி முடித்ததுதான் தாமதம், அரசரின் காலடிச்சத்தம் கேட்டது. தோழிகளெல்லாம் அந்தப்புரத்தின் பின்புறக்கதவைத் திறந்து கொண்டு சிங்காரப் பூங்காவனத்திற்குள் போய் விட்டார்கள்.

ராஜஸிம்மபாண்டியன் உள்ளே வந்ததும், ராணி அரசன் கையைப் பிடித்துத் தன் கையில் வைத்துக்கொண்டு, தலைநிமிர்ந்து அவன் முகத்தை உற்று நோக்கினாள். அரசன் தானாகச் சம்பாஷணையைத் தொடங்கவில்லை. சிறிது நேரம் மௌனமாயிருந்தான்.

அரசி புன்னகையரும்ப, தங்களைப் போன்ற வீரருக்கு வெல்லமுடியாத கஷ்டமும் உண்டோ? மந்திரி மாறங்காரியின் மேதையொளியில் தெளிவு பெறாத பிரச்னையும் இருக்கமுடியுமா? வில்லியைத் தளபதியாகப் பெற்றிருக்கும் வேந்தருக்கு ராணுவ நடவடிக்கைகளைக் குறித்தோ, உள்நாட்டுப் பாதுகாப்பைக் குறித்தோ சிறிது கவலை ஏற்படுவதற்கும் நிமித்தம் இல்லையே. மேலும் செல்வநம்பியும் சாஸ்திரஞானச் செல்வமும் தங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மகான்

விஷ்ணுசித்த சுவாமியும் விஜயம் செய்யப் போகிறார். இப்படியெல்லாம் வெற்றி தங்களை எதிர்நோக்கியிருக்கும்போது தாங்கள் ஏன் பிரமாதமாக ஆலோசனைகள் செய்துகொண்டிருக்க வேண்டும்? இரகசிய மந்திராலோசனையில் தங்களுடைய மனவலிமையைச் சிதைக்கக் கூடிய செய்திகள் தெரிந்தனவா?' என்று கேட்டாள்.

அரசன் அவளை மார்புறத் தழுவிக்கொண்டு மந்திராலோசனையில் வெளிப்பட்ட விஷயங்களை அவளுக்கு அறிவித்தான்.

பன்றிமலைச் செய்திகள் அரசிக்கு அதிசயமாகவே இருந்தன. ஆனந்த தீர்த்தரைக்குறித்துத் தன்னுடைய சந்தேகத்தை ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஏற்கெனவே நரஸிம்மன் உறுதிப்படுத்தியிருந்தான். ஆனால் சன்னியாசி—வேடங்களில் நடைபெற்றிருக்கும் கலக முயற்சிகளைக் குறித்துத் தன்னிடம் அவள் ஒன்றும் சொல்லியிருக்கவில்லை, அரசாங்கத்திற்கு விரோதமான சூழ்ச்சிகள் இவ்வளவு பிரமாதமாய் நடைபெற்றிருப்பதாகவும் சொல்லவில்லை. ஆனல் ஒற்றர் தலைவனுகிய அவளிடமிருந்து அத்தகைய செய்திகளைத்தான் தெரிந்துகொள்ளக்கூடுமென்று இவளும் எதிர்ப்பார்க்கவில்லை. மேலும் அரசன் அரசியல் காரியங்களையெல்லாம் ஒளிவு மறைவு இல்லாமல் அரசியிடம் ஆலோசித்து வருகிறுன் என்பதுதான் அவனுக்கு எப்படித் தெரியும்?

எல்லாரும், 'மதுரையை ஆளுகிறுன் மதுரை மன்னன்; மதுரை மன்னனை ஆளுகிறுர் மதுரை ராணி' என்று பொதுவாகச் சொல்லிக்கொள்வதுதான் நரஸிம்மனுக்கும் தெரியும். அரசிமீது அரசன் கொண்டிருந்த அளவு கடந்த அன்பையும், அரசியின் பேரழகையும் வைத்துக்கொண்டுதான் ஜனங்கள் அப்படியெல்லாம் பேசுவதாக நரஸிம்மனைப் போன்ற உத்தியோகஸ்தர்களெல்லாம் நினைத்திருந்தார்கள். இது அரசிக்கும் தெரியும்.

இப்போது அரசன் மூலமாகத் தேசத்தின் நிலைமை அரசிக்கு நன்றுகத் தெரிந்துவிட்டது, விரைவில் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சேரனையும், ஆனந்த தீர்த்தர் முதலான போலிச் சன்னியாசிகளையும் அடக்கி ராஜ்யத்திலே அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று அரசி ஆலோசனை சொன்னுள்.

'ஆனல் விஷ்ணுசித்தர் அழகர் மலையிலிருந்து விஜயம் செய்வதற்குள் வித்வத்சபை ஏற்பாடு செய்யவேண்டாமா?' என்று அரசன் கேட்டான்.

'அதை நானும் பிரஸ்தாபிக்க எண்ணினேன். திவ்யமாகச் செய்யவேண்டியதுதான். அந்த ஏற்பாடுகளில் தாங்களும், செல்வநம்பியும் ஏற்கெனவே தலையிட்டிருக்கிறீர்கள் என்றல்லவோ நினைத்துக்கொண்டிருக்கிறேன்?' என்று பதில் சொன்னுள் பூசுந்தரி.

'அந்தக் காரியம்தான் இப்போது அதிமுக்கியமானது. விஷ்ணுசித்தரின் அருளால் ராஜ்ய காரியங்களை ஒழுங்கு செய்து விரைவில் வெற்றிபெறமுடியும். இன்று இரவு மந்திரியாரையும் செல்வநம்பியையும் சந்திப்பேன். சதியாலோசனைகள் வலுத்துப்போகாமல் மந்திரியாரும், தளபதியும் கவனித்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிடலாமென்று நம்புகிறேன். வித்வத் சபைக்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் இருவரும் செல்வநம்பியின் உதவியுடன் கவனித்துக்கொண்டு போகவேண்டியதுதான்' என்றுன் அரசன்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு தூதன் வந்து ஓர் ஓலை நறுக்கை தாதிமூலம் அனுப்பினுன். ஆற்றங்கரையில் நடைபெற்ற அணிவகுப்பைப் பார்வையிட்ட பின் அரண்மனைக்குத் தளபதி திரும்பி வந்திருக்கிறுர் என்றும், அவசரமாகப் பார்க்க விரும்புகிறுரென்றும் தெரியவந்தது.

அரசன் தூதனைக் கூவியழைத்து, 'தளபதியைப் பூங்காவனத்தில் பளிங்கறை முற்றத்தில் அழைத்துவா' என்று கட்டளையிட்டான்.

(தொடரும்)

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

முனியார் துயரங்கள் முந்திலும்,
இன்பங்கள் மொய்த்திடிலும்
கனியார் மனம், கண்ண மங்கைநின்
றானைக் கலைபரவும்
தனியானையைத்தண் தமிழ் செய்த
நீலன் தனக்(கு) உலகில்
இனியானை, எங்கள் இராமா-
நுசனை வந்(து) எய்தினரே. 17.

எய்தற்(கு) அரிய மறைகளை,
ஆயிரம் இன் தமிழால்
செய்தற்(கு) உலகில் வரும் சட-
கோபனைச், சிந்தையுள்ளே
பெய்தற்(கு) இசையும் பெரியவர்
சீரை உயிர்களெல்லாம்
உய்தற்(கு) உதவும் இராமா-
நுசன் எம் உறுதுணையே. 18.

முனியார்-வெறுக்க மாட்டார்கள். முந்திலும்-முற்பட்டாலும். கனியார் மனம்-மனம் கனிந்து இளகிப்போகமாட்டார்கள். கண்ண மங்கை நின்றானை-திருக்கண்ண மங்கையென்ற திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் இறைவனை. கலைபரவும்-கலைகளெல்லாம் துதிக்கும். தனியானையை-ஒப்பற்ற யானை போன்ற பகவானை. தண் தமிழ் செய்த-குளிர்ந்த தமிழ்ப் பாடல்கள் தோத்திரம் செய்த. நீலன்-திருமங்கையாழ்வார். எய்தினர்-வந்து அடைந்தவர்கள்.

திருமங்கையாழ்வாருக்கு இனியவராகிய ராமாநுஜரை வந்து அடைந்தவர்கள், துயரங்கள் பொங்கி வந்தாலும் வெறுப்படையமாட்டார்கள்; இன்பங்கள் வந்து மொய்த்தாலும் மனவுறுதியை இழந்துவிடமாட்டார்கள்.

எய்தற்கு அரிய-அடைந்து அறிந்துகொள்வதற்கு அருமையான. இன் தமிழால்-இனிய தமிழ்ப் பாடல்களால். சடகோபன்-நம்மாழ்வார். பெய்தற்கு-வைத்துக்கொள்வதற்கு. பெரியவர்-(இங்கே) மதுரகவியாழ்வார். சீரை-சிறப்பை. உய்தற்கு-உய்வதற்கு. உறுதுணையே-உற்றதுணை: பொருந்திய துணை.

வேதங்களை இனிமையான ஆயிரம் தமிழ்ப்பாட்டாகச் செய்தவர் நம்மாழ்வார். அவரைத் தம் சிந்தைக்குள்ளே வைத்துப் பக்தி செலுத்திய உத்தம சீடர் மதுரகவியாழ்வார் என்ற பெரியவர். மதுரகவியாழ்வாரின் சிறப்பை உயிர்களெல்லாம் உய்ய வெளியிட்டவர் ராமாநுஜர். இத்தகைய ராமாநுஜர் எனக்குச் சிறந்த துணையாவார்.

ராகம் : பூர்விகல்யாணி

தாளம் : ரூபகம்

(பாட்டு—17ம்—18ம்)

; கபம கரீ ரீஸா	ஸா : ஸா ஸா ரிக ரிஸ	நி.த ஸரி கா ; கா ரீ	கம பா பக மா பா ; ‖
முனி . யார். துய	ரங் கள் முந்தி . லும் . .	. . இன். பங் கள் .	மொய் . . த்தி . டி லும் . ‖
கம பம நித பா பம	கம தம கா ரீ கா ;	; கத ப பா ம கா ரீ	கத பம கா ரீ ஸா : ‖
. கனி யார் . . . மனம் . .	கண் . . . ண மங்கை	. நின் . ரு . . னை .	க . லை . பர வும் ‖
; பம ப தா ப பா ஸ்ா	ஸ்ா; ஸ்ா ர்ிக் ர்ிஸ் நித	; பஸ் ஸ்ா ஸ்நி க்ரி ஸ்ா	ஸ்நி த்ரி ஸ்நி தநி தப பா ‖
. தனி யா . . னை .	தண் ட மி . ழிற் . . .	. செய். த நீ . . . லன்	ற . ன. க்கு . ல . கில். . ‖
; மத தம தா ஸ்ா ஸ்ா	ஸ்நி த்ரி ஸ்நி தநி தப பா , ம	கம தஸ் நித பம கா ரீ	நித பம கரி ஸரி கா; ‖
. இ . னி . யா . னை	எங் . . . க . ளி . ரா	மா . . . னு . ச . னை .	வந் . தெய் . தி . ன ரே ‖
; பா பா : பா பா	பா மத ப பா ம கரி கா	; கம தம மக கா ரீ	; பம க ரீ ஸ ஸா ; ‖
. எய் தற் க ரி	ய ம . றை . . க . ளை	. ஆ . யி . ர . மின் .	. த . மி . . மூற் ‖
; கம த மா கரீ ரி ஸா	ஸா; ஸா ரிக ரிஸ நி.த	; ஸ ஸ ரீ கா கா கா	ரீ கப பக மா பா ; ‖
. செய் . . . தற் . குல	கில் வரும்	. ச ட கோ. ப னை	. சிந் . தை . யுள்ளே ‖
; தநி த ஸ்ா நி மா தா	ஸ்ா ; ஸ்ா ஸ்ா ஸ்ா ;	ஸ்ா ர்ிக் ரிஸ் ஸ்ா ஸ்ா	ஸ்நி தா ஸ்நி தநி தப பா : ‖
. பெய். தற் . . . கி	சை யும் பெ ரி	ய ஸர் . சீ . . ரை	யு . யிர் க . ளெல். லாம் . . . ‖
; ஸ்ா ஸ்நி க்ரி ஸ்ா ஸ்ா	ஸ்நி த்ரி ஸ்நி தநி தப பா , ம	கம தஸ் நித பம கா ரீ	நித பம கா ரீ ரிஸ ஸரி ‖
. உய் தற் . . கு த	வும் . . இ . . . ரா	மா . . . னு . ச . னெம்	மு . று . துணை யே . . ‖

கம— (முனியார் துயரங்கள்)



புத்தகப் பித்தன்

நியாயவாதி

என்னைவிட அவன் ஏழெட்டு வயது முதியவன். எனக்கு உறவு முறையானவன். ஏன் ஞாபகம் தெரிந்தது முதல் நான் அவனை அறிவேன். அவன்தான் புத்தகப் பித்தன் பத்மனாபன்.

“அது என்ன புத்தகம் அம்பி” என்று அவன் என் கையில் இருக்கும் புத்தகத்தை ஆவலுடன் வாங்கி பார்ப்பான். அவனுக்குப் பிடித்த ஆசிரியரது புத்தகமாகவோ, விஷயமாகவோ அது இருந்தால், அவன் “நல்ல புத்தகம் அது. விஷயங்கள் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அதை நன்றாய் படித்து விட்டு என்னிடம் வா” என்பான்.

பத்மனாபன் கலாசாலை படிப்பு பெற்று, பி. ஏ. பரீக்ஷையில் தேறினவன். அப்படி பிரமாதமான பிரஸித்தியுடன் அவன் தேறவில்லை. எனினும் சரித்திரம், சாஸ்திரம், இலக்கியம்–இவற்றில் அவனுக்குப் பெருமிதமான ஆவலுண்டு. அவை ஸம்பந்தமான எந்த புத்தகத்தையும் அவன் வாங்கி படிக்காமல் இருக்கமாட்டான். முடியுமானால் அவற்றை தன்னிடம் பத்திரப்படுத்தியும், வைத்துக் கொள்ளுவான்.

சோற்றுக்கும், துணிக்கும் சுமாராக உள்ள குடும்பத்தில் பிறந்தவன் பத்மநாபன். அவன் தகப்பனார் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராய் இருந்தவர். அவரது மூன்று புத்திரர்களில் அவன் கடைசியானவன். அவனது மூத்த சகோதரன் தகப்பனாரைப்போல் பள்ளிக்கூட உபாத்தியாயர் உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டான். இரண்டாவது சகோதரனுக்கு சர்க்கார் இலாகாவில் உத்தியோகம். இருவரும் தங்களுக்குள்ள வரும்படியைக்கொண்டு திருப்தியுடன் இருந்து வருகிறார்கள்.

ஆனால் பத்மனாபன் நிரந்தரமான ஒரு உத்தியோகத்தில் அமரவில்லை. கொஞ்சகாலம் அவன் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்தான். கொஞ்ச காலம் அவன் ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராக சேவை செய்தான். இன்னும் கொஞ்ச காலம் அவன் ஒரு கம்பெனியில் வேலை செய்தான். பின்னர் அதை விட்டுவிட்டு கமிஷன் ஏஜண்டாய் சம்பாதிக்க முற்பட்டான். அதில் லாபம் கிடைக்காததால் அவன் அதை விட்டுவிட்டு, சும்மா இருப்பதே சுகம் என்ற நிலைமையை அடையும்படியாயிற்று.

இப்படி அவன் இருக்கும்படி நேரிட்டது அவனுக்கு ஒரு தொழிலிலும் ஆர்வம் ஏற்படாததுதான். உண்பதும், உறங்குவதும் தவிர மற்ற நேரங்களில் அவன் ஏதேனும் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டே இருப்பான். அதை முடிக்கும்வரையில் அவனுக்கு வேறு ஒரு விஷயத்திலும் மனம் செல்லாது. இப்படி இருப்பவன் உபாத்தியாயராகவோ, ஆசிரியராகவோ, குமாஸ்தாவாகவோ வேலை செய்யக்கூடியவனன்றல்லவா?

இப்படி நாற்பது பிராயம் நிரம்பு முன் அவன் யாதொரு உத்தியோகமும் இல்லாமல் வீட்டிலேயே காலத்தைக் கழிக்கும் வீணன் என்ற ஏச்சுக்கு இலக்கானான்.

அவன் பாகத்துக்கு ஐந்து ஏகரா நன்செய்யும், ஒரு தோப்பும் ஒரு சிறு வீடும் கிடைத்தன. நிலத்தின் வரும்படி வருஷாந்தர ஜீவனத்துக்குப் போதுமானதாய் இருந்தது. ஏதோ கொஞ்சம் செட்டாக இருந்தால் வருடம் நூறு அல்லது நூற்றைம்பது ரூபாய் மிச்சமாகும். இந்த ரூபாய்க்கு அவன் புத்தகங்கள் வாங்க வேண்டும் என்று ஆசைப்படுவான். ஆனால் அதற்குத் தடையாய் நிற்பாள் அவனது தர்ம பத்தினி தங்கம்மாள்.

தங்கம் ரொம்பவும் நல்லவள். பர்த்தாவிடம் அவளுக்கு அன்பும் ஆதரவும் இருந்தன. கூடிய மட்டிலும் அவள் பொறுமைசாலிதான். எனினும் சகிப்புத்தன்மைக்கும் ஒரு வரம்பு உண்டல்லவா? எப்பொழுதும் தனது கணவன் புத்தகமும் கையுமாய் இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. “என்ன படிப்பு இது! ஒரு காசுக்குப் பிரயோசனமில்லை.' அக்கம்பக்கத்தார்களைப் பாருங்கள். உங்கள் தமயனார் இருவரும் இப்படித்தான் உங்களைப்போல் இருக்கிறார்களா? இதையெல்லாம் நான் சொல்ல ஆரம்பித்தால், நான் பொல்லாதவளாவேன்” என்று ஒரு பிரசங்கம் பண்ண ஆரம்பித்துவிடுவாள் அவள்.

ஆனால் பத்மனாபன் அவளுக்கு மேல் பொறுமைசாலி. அவளது

பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டே புத்தகத்தைப் படித்துக்கொண்டு இருப்பான். பதில் ஒன்றும் சொல்லமாட்டான். அப்படி ஏதேனும் பதில் சொல்ல வேண்டும்படி நேரிட்டால் அவன், ‘சரி’ ‘ஆகட்டும்’ ‘பார்க்கலாம்.’’ இவை போன்ற மறு மொழிகளினால் தன்னை அவளது சொல்லம்புகளிலிருந்து விடுவித்துக்கொள்ள முயலுவான்.

இனி அவன் சீர்திருந்தமாட்டான் என்பதை அறிந்துகொண்ட அவனது சகதர்மிணி ஒரு விஷயத்தில் மிகவும் கண்டிப்பாயும் ஜாக்கிரதையாயும் இருந்தாள். அவனது நிலத்தின் வரும்படியை அவளே வசூல் செய்து குடும்பச் செலவுகளையும் அவளே செய்யலானாள். அப்படிச் செய்திராவிடில் நிலைமை மிகவும் மோசமாய் சீர்குலைந்து இருக்கும். ஏனெனில் பத்மனாபன் தனக்குக் கிடைக்கும் பணத்தைக்கொண்டு வீட்டில் புத்தகங்களை நிறைத்திருப்பான். அன்றாட காலக்ஷேபத்துக்கு வேண்டிய சாமான்களுக்குத் திண்டாட வேண்டியதாய் நேரிட்டிருக்கும்.

அந்த நிலைமையிலும் அவனிடம் சுமார் ஐந்நூறுக்குமேல் புத்தகங்கள் இருந்தன. எல்லாம் பொறுக்கி எடுத்தாற்போன்ற அருமையான புத்தகங்கள். அவற்றை அவன் எப்படி சேகரித்தானோ தெரியாது. அவற்றை கண்ணிமை பாதுகாப்பதுபோல் பாதுகாத்து வந்தான்.

பனிரெண்டு வருடங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவம் ஒன்று எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு நாள் காலை பத்மனாபன் என்னிடம் வந்தான். முகத்தில் ஒரு பரபரப்பு. “அம்பி! எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். உன்னிடம் பதினைந்து ரூபாய் இருக்குமா? எனக்குக் கடன் கொடுப்பாயா?’’ என்று கேட்டான்.

“நான் சற்று பின்னடைவதைக் கண்ட அவன் வலது கை விரலிலிருந்து பொன் மோதிரத்தைக் கழற்றி என்னிடம் கொடுத்து, இதை அடமானமாக வைத்துக்கொள். எனக்குப் பணம் இப்பொழுது அவசியமாய் இருக்கிறது இல்லை என்று சொல்லாதே?’’ என்று கெஞ்சும் குரலில் கேட்டான்.

“எதற்காக பணம்!’’ என்று கேட்டேன். பத்மனாபன் “எதற்காகவா! பண்டித ஜவஹர்லால்ஜியின் சுய சரிதம் பிரசுரமாய் இருக்கிறது. அதில் ஒரு பிரதிக்கும் வேறு ஒரு புத்தகத்துக்கும் நான் ஆர்டர் கொடுத்திருந்தேன். வி. பி. பார்ஸல் வந்துவிட்டது. பணத்தைக் கொடுத்து வாங்க வேண்டும். மனைவிக்குத் தெரிந்தால் ஆபத்து. தபாலாபீஸிலேயே போய் வாங்கிகொண்டு வர வேண்டும், தயவு செய்து பணத்தைக் கொடு’’ உனக்குப் புண்ணியமுண்டு! என்று கெஞ்சினான்.

நான் மறு வார்த்தை பேசாமல் பணத்தைக் கொடுத்தேன். அவனிடம் அவனது மோதிரத்தை திருப்பிக் கொடுத்து “பணத்தை உன் சௌகரியம்போல் திருப்பிக் கொடு’ என்று கூறினேன்.

அப்பொழுது சற்று தூரத்தில் அவன் மனைவி வந்துகொண்டிருந்ததை அவன் பார்த்துவிட்டு, “சரி நான் போகிறேன். அவள் வருகிறாள். ஜாக்கிரதை. எதையானும் அவளிடம் உளறாதே’’ என்று எச்சரித்துவிட்டு வெளியே நடையைக் கட்டினான்.

தங்கம் என்னிடம் வந்தாள். மிகுந்த ஆத்திரத்துடன் அவள் “ஏதேனும் பணம் கேட்க உங்களிடம் வந்தாரா அவர்?’’ என்று கேட்டாள்.

‘ஆம்–மன்னி–இல்லை’’ என்று ஏதோ சால்ஜாபு சொன்னேன்.

“இதோ பாருங்கள். அவர் அசட்டு பிசட்டுனு பணம் கேட்டால் நீங்களும் அசட்டு பிசட்டு என்று கொடுத்து விடாதேயுங்கள். அப்புறம் பணம் திரும்பி வராது. அதற்கு நான் ஜவாப்தாரி யல்ல.’’ என்றாள் கண்டிப்பான குரலில்.

“சரி’’ என்றேன்.

பழைய புத்தகங்கள் என்றால் பத்மனாபனுக்கு ரொம்பவும் ஆசை. பழைய புத்தகங்கள் விற்பவர்களிடம் அவன் பேரம் செய்வதே ஒரு அழகு. அவன் வெகு நாட்களாய் தேடிக் கொண்டிருந்த புத்தகம் அப்பழைய புத்தகக் கும்பலில் இருக்கும். அதைப் பார்த்தவுடன் அவனுக்கு அமெரிக்காவை முதல் தடவை கண்டபொழுது கொலம்பஸுக்கு என்ன உணர்ச்சி ஏற்பட்டதோ, அதே உணர்ச்சி உண்டாகும். ஆனால் அதை அவன் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டான். மிகவும் அலட்சியமாகவும், வேண்டா வெறுப்புடனும் எடுப்பவன் போல் அந்தப் புத்தகத்தையும் மற்றும் இரண்டு மூன்று புத்தகங்களையும் எடுத்து விலை கேட்பான். நெடுநேரம் பேரம் பண்ணிவிட்டு எவ்வளவு குறைந்த விலைக்கு வாங்க முடியுமோ அவ்வளவு குறைந்த விலைக்கு வாங்கி விடுவான்.

"என்ன ஓய்! குழாயடியிலேயே நின்னுண்டு சந்தியாவந்தனம் பண்றேளோ?"

"இல்லேன்னா! தண்ணி நின்னுடபோறதேன்னு பிடிச்சுவைக்கறேன்! தண்ணி நாத்தம் சகிக்கப்படலை"

புது புத்தகத்தைவிட பழைய புத்தகம் வாங்குவதில் ஒரு சௌகரியம் உள்ளது. புது புத்தகத்தை அதற்கு விதிக்கப்பட்ட விலைக்குக் குறைந்து வாங்க முடியாது. ஆனால் பழைய புத்தகத்தை என்ன விலைக்கு வேண்டுமானாலும் வாங்கி விடலாம். அது வாங்குபவனது சாமர்த்தியத்தைப் பொறுத்து இருக்கிறது. இந்த விஷயத்தில் நமது புத்தகப் பித்தன் பத்மனாபன் மிகவும் சாமர்த்தியசாலி.

ஏதோ ஒரு பங்கு மார்க்கெட்டில் பெரிய லாபம் ஸம்பாதித்த கமிஷன் வியாபாரியைப்போல் பத்மனாபன் வருவான். அவன் கையில் ஒரு பழைய புத்தகம் இருக்கும். "இது என்ன தெரியுமா?" என்று கேட்பான். அதை அவனிடமிருந்து பிடுங்கினால், அவன் துடிதுடித்துக் கொண்டே, "என்ன முரடனப்பா நீ! இப்படியா புத்தகத்தைப் பிடுங்குவது? புத்தகம் கிழிந்து போனால், அதற்கு ஈடு செய்ய முடியாதே. அவ்வளவு அருமையான புத்தகம் அல்லவா இது? ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் ஒரு பிரதி இப்பொழுது அகப்படாதே." என்று பிரமாதமாய் ஆரம்பித்து விடுவான்.

இப்படி அவனிடம் இப்பொழுது எத்தனையோ அருமையான புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை தினம் ஒரு தடவை பார்ப்பதும், தனக்குவேண்டிய புத்தகத்தை எடுத்து இன்புறுவதுமே அவனது தினசரி அலுவல். இதைப் பற்றி அவனை யாரேனும் கேலி செய்தால் அவன் சிரித்துக் கொண்டே "ஆமாம். நான் பித்தன்தான். புத்தகப் பேயன்தான்.

"பேயரே எனக்கு யாவரும். யான் ஓர் பேயனே எவர்க்கும், இது பேசி என்?" என்ற ஆழ்வார் பாசுரத்தை ஆதாரமாய் காட்டுவான்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

வீரனின் தீரம்

'சுவாமி'

மிதுனபுரியை விக்ரமன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு மாரன் என்ற மந்திரி இருந்தான். அரசன் மந்திரி வார்த்தைக்கு மறுமொழி கூறமாட்டான். மாரன் எதைச் சொன்னாலும் அப்படியே நம்பும் சுபாவமுடையவன். விக்ரமனுக்கு மாலதி என்ற அழகிய ஒரு பெண் இருந்தாள். அவள் மிகவும் அறிவில் சிறந்தவள். ஆனால், மந்திரியின் சூழ்ச்சியால் தன் தந்தையின் சுபாவம் அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் தந்தையை எப்படியாவது திருத்த வேண்டுமென்று எண்ணங் கொண்டாள்.

மந்திரிக்கு வெகு நாட்களாக ஒரு எண்ணம் குடிகொண்டிருந்தது. எப்படியாவது அரசனைக் கொன்று, மாலதியை மணம் புரிந்து, இந்த நகரைத் தானே ஆளவேண்டுமென்று பேராசை கொண்டிருந்தான். ஒரு நாள் அரச சபை கூடியிருந்த சமயம் ஒரு ஏழைச்சிறுவன் அங்கு எப்படியோ வந்து, அரசனை நோக்கி, "மகாராஜாவே! நானோ ஒரு அனாதை. எனக்கு யாரும் திக்கில்லை. ஆகையால், தங்கள் அரண்மனையில் எனக்கு ஒரு வேலை தரவேண்டும்'' என்று கவலை தோய்ந்த முகத்துடன் கேட்டான். அரசனும், மந்திரியும் சிறுவன்பால் இரக்கங்கொண்டு அரண்மனையில் ஒரு உத்தியோகம் கொடுத்தார்கள். அவன் ஏழைச் சிறுவனாகவிருந்தபோதிலும் அவன் முகத்தில் மன்மதன் குடிகொண்டிருந்தான். நல்ல கட்டுமஸ்தான சரீரம் அவனை வீரன் என்று அழைப்பார்கள்.

ஒரு நாள் வீரன் அந்தப்புரத்தில் போகவேண்டி நேர்ந்தது. அந்தசமயம் அரசகுமாரி அவன் அழகைப் பார்த்து, அவனுக்கு அடிமையாகி, தன் மனக்கருத்தைக் கூறினாள்., வீரனும் சம்மதித்து அவளுக்கு ஆறுதல் கூறினான். சில நாட்கள் சென்றன. இந்த விஷயம் மந்திரிக்கு எப்படியோ எட்டிவிட்டது. வீரனை தொலைத்தாலொழிய தன் எண்ணம் ஈடேறாது என்று தன் மனதிற்குள்ளாகவே சினம் கொண்டான். ஆனால், அரசன் மகள் பிடிவாதக்காரியாயிற்றே, நாம் வீரனை தண்டனைக்குள்ளாக்கினால், அரசகுமாரி இதில் குறுக்கிடுவாள். ஆகையால், மாரனை தந்திரமாகத்தான் கொல்ல வேண்டும் என்று தன் மனதை திடப்படுத்திக் கொண்டான்.

அரசனும் மந்திரியும் ஒரு நாள் நந்தவனத்தில் ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்த சமயம், மந்திரி அரசனை நோக்கி, "அரசே நாம் இங்கு சுகமாக வாழ்கிறோம். நம் முன்னோர்கள் சுவர்க்கலோகத்தில் என்ன பண்ணுகின்றனர் என்று அறிய வேண்டாமா?'' என்று கூறினான். அவ்வளவுதான். "ஆம் கட்டாயம் அறியவேண்டியதுதான். அதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று

கேட்டான். "அரசே! சுவர்க்கலோகத்திற்கு நர்மெல்லோராலும் போக முடியாது. நல்ல அறிவும், சரீர திடமும், வாலிப பருவமும் உள்ளவர்கள் போக முடியும். ஆகையால், நமது அரண்மனையிலுள்ள வீரனைத்தான் அனுப்பவேண்டும்;' என்று கூறினான். உடனே அரசன் வீரனுக்கு கட்டளையிட்டான். வீரன் மறுமொழி கூறாமல் சரியென்று ஒப்புக்கொண்டு தனியே வந்து புலம்பிய வண்ணமிருந்தான்.

ராஜகுமாரி இந்த விஷயத்தைக்கேள்விப்பட்டு ஓடோடியும், வீரனை வந்து சந்தித்தாள். வீரன் நடந்ததைக் கூறினான். ராஜ்குமாரி கவலையுடன் அவன் கைகளைப்பிடித்துக்கொண்டு, தாங்கள் இறந்தால்தானே சுவர்க் க்லோகம் காணமுடியும் என்று வருத்தத்தோடு கூறினாள்.

"அரசகுமாரி! உன் தந்தை கட்டளை மீறினால், நான் இறக்கவேண்டிதானேவரும்? ஆனால் எனக்கு நீர் ஒரு சிறிய உதவி செய்யவேண்டும்" என்றான். அதாவது:—மயானத்தில் "சிதை" அடுக்குமிடத்தின்கீழ் ஒரு சுரங்க வழியொன்றும், ஒருவருமறியாது நான் வெளியேவர ஒரு சுரங்க வழியும் ஏற்படுத்தி தந்தால், பொறாமை கொண்ட மந்திரியையும் ஒழிப்பேன். உன் தந்தையையும் நான் திருத்துவேன், உன்னையும் நான் மணம் செய்து முடிப்பேன். இந்த ராஜ்யத்திற்கு இளவரசனாவேன் என்றான். அவ்வளவுதான்.

அரசகுமாரி தன் ராஜ்யத்தில் உள்ள ஒரு கொத்தனை அழைத்து நிறைய பணப்பைகளை கொடுத்து அவனை நம்பிக்கையாக தன் வசமாக்கி, கொத்தரே, நீர் துரிதமாக நம் மயானத்திற்குச் சென்று "சிதை' அடுக்கும் கீழ்பாகத்திலிருந்து, மற்ற விஷயங்களையும் ஒருவருக்கும் தெரியாமல் இரண்டு தினத்திற்குள் செய்துமுடிக்க வேண்டும் என்றாள். கொத்தனும் சம்மதித்தான். மயானத்திலுள்ள தொழிலாளர்கள் யாதொரு தடையும் சொல்லமாட்டார்கள். இதோ என் தந்தையின் கணையாழி, இதைக் காட்டியவுடன் அவர்களும் உனக்கு துணை செய்வார்கள். நானும் அவர்களை கண்டு விஷயம் கூறி முடித்து வருகிறேன் என்று கூறி அனுப்பினாள்.

வீரன் அரசனிடம் சென்று, நாளை நான் சுவர்க்கம் போகப்போகிறேன். ஆகையால் மயானத்தில் 'சிதை' அடுக்கி தயாராக வைத்திருக்க வேண்டும் என்று கூறி சென்றான். அவன் கூறிய சில நிமிஷத்திற்கெல்லாம் மயானத்தில் சிதை தயாராகிவிட்டது. முன்னெச்சரிக்கையாக மயானத்திற்குச் சென்ற அரசகுமாரி, அங்குள்ளவர்களை தன் வசப்படுத்தி சுரங்க வழி தடைப்படாமல் சிதை அடுக்கி, இந்த விஷயம் நம்மை தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது என்று சொல்லி தன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள். மறுநாள் அரசன், மந்திரி, குடிஜனங்கள் புடைசூழ மயானத்திற்கு வந்திருந்தார்கள். அனைவரும் பார்த்திருக்க "வீரன்" அரசே! நான் சுவர்க்கலோகம் சென்று உங்கள் சந்ததியாரின் க்ஷேமங்களை அறிந்து வருகிறேன் என்று சொல்லி சிதையின்மேல் ஏறி படுத்தான். அவன்மேல் சந்தனக் கட்டைகள் மூடப்பட்டு 'தீ' வைத்தார்கள். இந்த வைபவத்தைக் கண்ட ஜனங்கள் என்னே அக்ரமம் என்று சொல்லி வருத்தத்தோடு வீடு திரும்பினார்கள். மந்திரி மாரன் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து இறுமாப்பு கொண்டான்.

சுமார் நான்கு மாத காலமாயின. சுரங்கத்தின் வழியால் தப்பித்துக்கொண்டு சென்ற வீரன் மறைந்திருந்தான். ஒரு நாள் ராஜ சபை கூடியிருக்கும் சமயம், காவி அங்கி தரித்து காதில் குண்டலம் அணிந்துஒருஇளம் சன்னியாசியைப் போல் அங்கு வந்தான். அரசபூபா! என்னைத் தங்களுக்கு அடையாளம்தெரியவில்லையா? நான்தான் வீரன். சுவர்க்கலோகம் சென்றவன். அங்கே உங்கள் சந்ததியார்கள் எல்லாம் க்ஷேமம். ஆனால் உன் தந்தை மட்டும்

மிக வருத்தத்தோடு ஆகாரம் அருந்தாமல் புலம்பிக் கொண்டிருக்கிறார் என்று கூறினர். அரசன் வீரனை கட்டித்தழுவிக்கொண்டு, அளவில்லா சந்தோஷமடைந்தான். வீரா, என் தந்தைக்கு என்ன குறை என்று தழுதழுத்த குரலில் கேட்டான். அவர் மனதில் சில கேள்விகள் அவரை துன்புறுத்துவதாகவும், அதற்கு தக்க பதில் கூறுபவர்கள் இங்கு யாருமில்லை. ஆனால் என் மகன் விக்ரமனின் மந்திரியான "மாரனால" என் கேள்விகளுக்கு விடை அளிக்க முடியும். ஆகையால் நான் சொன்னதாக என் மகனிடம் கூற வேண்டும் என்று தெரிவித்தார். அவ்வளவு தான். அரசன் உடனே மந்திரியை நோக்கி, மந்திரியாரே தாங்கள் இப்பொழுதே "சுவர்க்கம்" சென்று என் தந்தையின் மனக்கவலையை போக்கிவிட்டு வரவேண்டும் என்று கட்டளையிட்டான் அவ்வளவுதான் மயானத்தில எங்கேயோ ஒரு பக்கத்தில் சிதைமூட்டப்பட்டது. மந்திரிக்கு ஒன்றும் தோன்றாமல் திருடனைப்போல் விழிக்க ஆரம்பித்தான்.

வீரன் மந்திரியை நோக்கி, தாங்கள் அங்குசென்றவுடன் உங்களுக்கு அளவில்லாத மரியாதைகள் நடக்கும்தாங்கள் யாதொன்றுக்கும் கவலை வேண்டாம் என்று குறும்பாகக் கூறினான். மயானத்தில் மந்திரி, குடிஜனங்கள், அரசன் யாவரும் சென்றார்கள் வீரனும் சென்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அரசன் மந்திரியை நோக்கி ஏன் தாமதம், அரச கட்டளை நிறைவேறட்டும் என்று கர்ஜித்தான். என் தந்தை கவலையோடு இருக்க நான் சுகமாக வாழ்வதா, சுவர்க்கம் போய் வாருங்கள் என்று கூறினான்.

மந்திரி வாய்பேசாது சிதைமேல் ஏறி படுத்தான். கட்டைகளால் மூடப்பட்டு 'தீ' வைக்கப்பட்டது, சொல்ல வேண்டுமா அக்கினி பகவானுக்கு? அரசன் குடிஜனங்கள் அனைவரும் தன் நகர் வந்தார்கள். வீரனால் ஒருநாள் ராஜசபை கூட்டப்பட்டது. அப்பொழுது, வீரன் எழுந்து உண்மைவிஷயங்களை விளக்கிக் கூறினான். மாரன் உங்களைக் கொலை செய்யவும் துணிந்திருந்தான். என்னைச் சதிசெய்ய நினைத்த அவனுக்கு யமலோகத்திற்கு வழி காட்டிவிட்டேன் என்றான். மந்திரியின் வார்த்தையால் தன் புத்தி கெட்டதை பற்றி வருந்தி, தன் மகள் மாலதியை வீரனுக்கு மணம் செய்வித்து, அந்நாட்டிற்கு வீரனையே அரசனாக்கினான். குடிஜனங்கள் சந்தோஷமடைந்தனர். வீரனின் தீரத்தை புகழாதவர் யாருமில்லை.

கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிககாட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமல் நீக்க வேண்டும்.

—ஆசிரியர்.

மாதர் மகா சபை

'குங்குமம்'

'வாருங்கள் பாட்டி, வாருங்கள். எங்கே ரொம்ப நாளாயிற்று. கண்ணிலேயே காண்கிறதில்லையே!' என்று சேஷிப்பாட்டியை வரவேற்ருள் ருக்கு.

'காணுமலென்ன? இங்கேதான் இருக்கிறேன். இதை விட்டால் நமக்குப் போக்கிடம் வேறு எங்கே இருக்கிறது? இப்படி ஒழிந்த வேளைகளில் இங்கே அங்கே போய் கொஞ்ச நாழி பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவேன். இப்பொழுது அதற்கும் ஒழிவு இல்லை!' என்ருள் சேஷிப்பாட்டி.

'ஏன், நாட்டுப்பெண் அகத்தில் இருக்கிருளோ இல்லையோ?' என்ருள் ருக்குவின் மாமியார்.

'அவள் எதற்காக இங்கு இருக்கிருள்? நான்தான் இருக்கிறேன் அகமுடையானுக்குச் சமையல் செய்துபோட. அவள் 'ஹாய்' என்று பிறந்தகத்தில் இருந்துகொண்டிருக்கிருள்' என்ருள் சேஷிப்பாட்டி.

'முன்பு தன் தமயனுக்கோ, தம்பிக்கோ கல்யாணம் என்று போனுளே அப்புறம் வரவில்லையா?' என்ருள் ருக்கு.

'ஊஹூம்.'

'என்ன பாட்டி, அவள் போய் 'கிட்டதட்ட' இரண்டு மாசம் ஆகவில்லை?'

'இரண்டு மாசமாகப் போவானேன். சித்திரை மாதம் 5-ந் தேதி புறப்பட்டுப்போனுள். இதோ ஆனி முடிந்து ஆடியும் பிறந்துவிட்டது. அவள் எதற்காகடி வருகிருள்? பந்து பரிபாலனமெல்லாம் செய்தாக வேண்டாமா?'

'ஏன், உங்கள் பிள்ளை ஒன்றும் காதில் போட்டுக்கொள்கிறதில்லையா?'

'இவனை ஏதாவது அவள் லட்சியத்தில் வைத்திருந்தால் தானே?'

'அதென்ன பாட்டி அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?'

பின் எப்படிச் சொல்லச் சொல்லுகிருய்? இங்கிருந்து



''...வைத்தியரிடம் கொண்டு போனுல்...''

போர்கும்போது அண்ணனுக்குக் கல்யாணம் என்று சொல்லிவிட்டுப்போனுள். பிறகு மாமாவின் பிள்ளைக்குக் கல்யாணம் என்று அங்கிருந்து தஞ்சாவூருக்குப் போனுள். அங்கிருந்து பெரியப்பா பெண்ணுக்குக் கல்யாணம் என்று மதுரைக்குப் போனுள். பிறகு பிறந்தகம் வந்தாள். அப்பாவுக்கு உடம்பு சரியில்லையென்றும், சகாயத்துக்கு யாரும் இல்லையென்றும், பத்து நாள் இருந்துவிட்டு வருவதாகவும் கடிதம் எழுதியிருந்தாள். அந்தப் பத்து நாள் கழித்து குழந்தைக்கு உடம்பு சரியாயில்லையென்றும் டாக்டர்கள் அதன் வயிற்றில் கட்டி என்று சொல்கிருர்களென்றும் ஆகவே வயிற்றுக் கட்டிக்கு மருந்து வாங்கி நேரிலோ அல்லது தபாலிலோ உடனே அனுப்பிவைக்கும்படியும் எழுதிவிட்டாள்.'

'வாங்கி அனுப்பியாயிற்ரு?'

'அனுப்பாமல்? இங்கு வேண்டுமானுல் 'தா தை' என்று குதித்து என்னை அதிகாரம் பண்ணுவானே ஒழிய, அங்கே சம்பந்தப்பட்டவரையில் பெட்டியில் அடங்கிய பாம்புதான்!'

'குழந்தைக்குக் கட்டி என்ருல் மருந்து வாங்கி அனுப்பித்தானே ஆகவேண்டும் பாட்டி?'

'போடி பைத்தியமே! கட்டியாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் வெறும் பூதஞ்சி! குழந்தை சற்று ஏக்கம் பிடித்த மாதிரி 'சிணுங்கி சிணுங்கி' அழ ஆரம்பித்துவிட்டால் உடனே கட்டிதான். டாக்டர்கள் என்ன செய்வார்கள் பாவம்! நாம் கட்டி மாதிரி இருக்கிறது என்று சொன்னால் கட்டிக்கு மருந்து வாங்கிக்கொடுக்கும்படி சொல்கிறார்கள். கட்டி வைத்தியரிடம் கொண்டு போனால் எதற்கும் முதலில் ஒரு மூன்று மாசத்துக்குக் கொடுத்துப் பாருங்கள் என்றுதான் சொல்லி மருந்தைக் கொடுப்பார்.'

'அவர் கடமையை அவர் செய்கிறார். அதற்குத்தானே அவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்' என்றாள் சரோஜா.

'அப்படியே கட்டியாகவே இருக்கட்டும். அந்த மருந்தை இங்கே கொடுத்தால் அந்தக் குழந்தை சாப்பிடமாட்டேன் என்று சொல்லுமா?' என்றாள் பாட்டி.

'என்னமோ பிறந்தகத்தில் கொஞ்சநாளைக்கு இருந்துவிட்டு வரவேண்டுமென்று ஆசையாயிருக்கிறாப் போலிருக்கிறது. இருந்துவிட்டுத்தான் வரட்டுமே' என்றாள் விமலா.

'இருக்க வேண்டியது தான். இருந்துவிட்டு வரட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. இவளையும் (தன் பிள்ளையை) கூடவே அழைத்து வைத்துக்கொண்டிருந்து விட்டாளானால் எத்தனை நாளைக்கு வேண்டுமானாலும் இருந்து விட்டு வரட்டும். அதைப்பற்றி எனக்குக்கொஞ்சம்கூட விசாரமில்லை.

'ஏன், பிள்ளை இங்கே இருப்பதனால் உங்களுக்கு என்ன கஷ்டம் பாட்டி?' என்றாள் பானு.

'அதை ஏன் கேட்கிறாய்? அவன் படுத்திவைக்கிறபாடு கொஞ்ச நஞ்சமில்லை. இந்தக் காலத்துப் பசங்களுக்கென்று இனி எங்காவது 'சமையல் பயிற்சிப்பாடசாலை' ஏற்படுத்தி அதில் படித்து பாஸ் செய்து விட்டு வந்தால்தான் வீட்டில் குடித்தனம் பண்ண முடியும் போலிருக்கிறது!' என்றாள் பாட்டி.

'அதென்ன பாட்டி அது, புதுசாக ஒரு 'குண்டை' வீசி எறிகிறீர்கள்?'

'இல்லாமலென்ன? இத்தனை வருஷங்களாய் நாங்களும் குடித்தனம் செய்யவில்லையா? ஆபீஸ் போகிறவர்களுக்கும் வருகிறவர்களுக்கும் சமையல் செய்து போடவில்லையா? நல்ல பெயர் வாங்கவில்லையா? ஆனாலும் இப்படிப்பட்ட அக்கிரமமா?

'ஏன், உங்கள் சமையல் நன்றாக இல்லையென்று சொல்கிறாரா உங்கள் பிள்ளை?'

'அதென்னமோ எல்லாம் விசித்திரமாகத்தான் இருக்கிறது. இப்பொழுது காய்கறி விற்கிற விலையில் எதையாவது ஒன்று வாங்கிச் செய்வதே அருமையாக இருக்கிறது. அப்படிக் காசைக் கொடுத்து எதையாவது வாங்கிச் சமைத்துப் போட்டால் புது மாப்பிள்ளை மாதிரி எல்லாவற்றையும் இலையில் அப்படியே ஒதுக்கிவிட்டுப் போய்விடுகிறான்!'

'...ஸ்பூனால் இட்டிலியை...'

'ஏன் வாய்க்கு ருசியாக இல்லையாமோ?'

'எப்படியடியம்மா, ருசியாக இருக்கும்? காலையில் 7 மணிக்குக் குறைந்து படுக்கையை விட்டு எழுந்திருப்பது கிடையாது. எழுந்தவுடனே நேராக ஹோட்டலுக்குப் போக வேண்டியது. அங்கே பல்லைத் தேய்க்கிறானோ இல்லையோ. வயிற்றை நிரப்பிக்கொள்ள வேண்டியது. கொஞ்சநாழி அங்கே இங்கே அரட்டை அடித்துவிட்டு வீட்டுக்கு வர வேண்டியது. துணிகளை விழுத்துப் போடவேண்டியது. பரக்கப்பரக்க உடம்பில் இரண்டு சொம்பு ஜலத்தை விட்டுக் கொள்ள வேண்டியது. சந்தி, சாவித்திரி, நெற்றிக்கு இட்டுக் கொள்வது அதெல்லாம்தான் ஒன்றும் கிடையாதா! கண்ணாடிக்கு எதிரில் நின்றுகொண்டு கிராப்பை வாரி விட்டுக் கொள்ள வேண்டியது. உடனே ஒன்பது மணிக்கெல்லாம் இலையில் சாப்பிட வந்து உட்கார்ந்தால் அது எப்படி பசியெடுக்கும்?'

'அமிர்தத்தைப் போட்டால் கூட விஷம் மாதிரிதான் இருக்கும்' என்றாள் சரோஜா.

'சரோஜா சொல்வது பொய்யே இல்லை. இலையில் உட்கார்ந்து குருவி கொரிக்கிற மாதிரி இரண்டு நிமிஷம் கொரித்துவிட்டு, அப்படியே இலையில் எல்லாவற்றையும் வைத்துவிட்டு எழுந்து விடுகிறான்.'

'ஹோட்டலில் விதம் விதமாகச் சாப்பிட்ட வாய்க்கு, வீட்டில் ஒன்றும் வேண்டியிருக்காது பாட்டி, வேண்டியிருக்காது. பாதாம் க்ஷீரை நினைத்துக்கொண்டு நாக்கில் 'நொட்டை' விட்டுக்கொண்டு வருங்கள். நாம் சுண்டைக்காய் குழம்பைக் கொண்டு போய் இலையில் ஊற்றினால் நிஜமாக அதுகள் கண்ணெடுத்துப் பார்க்குங்களா? கம கம

வென்று ஒரு பிளேட்டில் வெங்காய சாம்பாரை வைத்துக்கொண்டு ஸ்பூனால் இட்லியைத் துண்டு துண்டாக நறுக்கி சாம்பாரில் மூழ்கடித்து, அத்துடன் கூட மெதுவடையையும் போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டு வரும் பசங்களுக்கு வெத்து இட்டிலியையும், தோசையையும் கொடுத்தால் கண்ணெடுத்துப் பார்க்கத் தோன்றுமா? ஹோட்டலில் பூரி சாப்பிடுகிறானேயென்றால் பூரிக்கு கமகமவென்று இரண்டு பங்கு உருளைக்கிழங்கு போட்டுக் கொள்கிறான், சாப்பிடுகிறான். டிபனுக்கென்று போய் உட்கார்ந்தால் காரம், தித்திப்பு, அதில் மனதுக்கு இஷ்டமானதை வாங்கிச் சாப்பிடுகிறான்.' என்றாள் ருக்குவின் மாமியார்.

'சம்சாரிகள் குடித்தனம் பண்ணுகிற இடத்தில் அப்படியெல்லாம் முடியுமோ?' என்றாள் பாட்டி.

'அது தெரியாமல்தான் சாதாரண குடும்பங்கள் பல அல்லாடுகிறதுகள். கண்டதையும் தின்னால் உடம்புக்கு நல்லதோ கெட்டதோ அது ஒருபுறம் இருக்கட்டும். சொற்ப சம்பளக்காரன் தினமும் ஹோட்டலுக்குப் போகிறது என்று வைத்துக் கொண்டு விட்டானானால் அந்தக் குடும்பம் எப்படி முன்னுக்கு வரும்? ஹோட்டல் உள்ளே நுழைந்தால் குறைந்தது எட்டணா காசைக் கொடுக்காமல் வெளியே வர முடியாது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதில் சிநேகிதர்கள் யாராவது வந்துவிட்டால் அதுவே ஒரு ரூபாயாகவும் ஆகிவிடும்' 'என்றாள் சரோஜா.

'இந்தமாதிரி தினமும் ஒன்றும் இரண்டுமாக ஹோட்டலில் செலவழித்துவிட்டு வந்தால் வீட்டில் குடித்தனத்துக்குச் செலவுக்கு எப்படி போதும்?' வீட்டில் ஏதாவது சாமான்கள் இல்லையென்று சொன்னால் 'குடும்பத்தை சிக்கனமாகக் கொண்டுவரத் தெரியவில்லை. வீண் செலவு செய்கிறீர்கள். நாள் முழுவதும் செக்கு மாடுமாதிரி கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்தாலல்லவோ உங்களுக்கு அந்தக்கஷ்டம் தெரியும்?' என்று நம்மீது குற்றம் சாட்ட ஆரம்பித்து விடுகிறான். எப்படியிருக்கிறது நியாயம்?' என்றாள் பாட்டி.

'பேசாமல் இந்த வெய்யில் காலத்துக்கு இடைவேளைக்கு நல்ல தயிர் சாதமாகப் பிசைந்து எடுத்துக்கொண்டு ஒரு பிளாஸ்கில் காப்பியையும் கொண்டு போனால் பணச்செலவும் மிச்சம். உடம்புக்கும் நல்லது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'இந்த வார்த்தையை ஒருநாள் அவனிடம் சொல்லிவிட்டு நான் வாங்கிக் கொண்ட அசட்டுப் பட்டம் போதும், போதும், ஏன் சொன்னோமென்று ஆகிவிட்டது. அவனாயிற்று, அவன் சம்சாரமாயிற்று. நான் இருக்கப்போகிறது இன்னும்கொஞ்ச நாள். காடு வா வா என்கிறது வீடு போ போ என்கிறது. நமக்கேன் இந்த வீண் விசாரமெல்லாம்? கெட்டிக்காரத்தனமாக இருந்தால் நாலு பேருக்கு மனுஷனாக இருந்து கௌரவமாகப் பிழைக்கிறான், இல்லையானால் திண்டாடுகிறான் என்றாள் பாட்டி.

'ஏன், தயிர்சாதம் கொண்டு போகச் சொன்னதற்கு என்ன அசட்டுப் பட்டம் கட்டுகிறார்?' என்றாள் சரோஜா.

'தயிர் சாதத்தோடு மாத்திரம் நின்றுவிட வேண்டாம். கூடவே ஒரு இரட்டைமாட்டு வண்டியும் வாங்கிக்கொடுக்கச் சொல்கிறான்.'

'இரட்டை மாட்டுவண்டி எதற்காம்?'

'கட்டுசாதம் எடுத்துக் கொண்டு போக.'

'தயிர்சாதம் எடுத்துக் கொண்டு போவதென்றால் அவ்வளவு கர்நாடகமென்று அர்த்தமாமே? எங்காவது நூறு மைல் பிரயாணம் செய்வதாயிருந்தால்தான் தயிர்சாதம் எடுத்துக்கொண்டு போகவேண்டுமாமோ? நன்றாக இருக்கிறது பதில்!' என்றாள் ருக்குவின் மாமியார்.

'முட்டாள்கள். எதையாவது சொல்லிக்கொண்டு போகிறதுகள். நான் தான் சொல்லிவிட்டேனே. நம்மையெல்லாம் கர்நாடகம் என்று எங்கோ ஒதுக்கி வைத்திருக்கிறதுகள். நாம் எது சொன்னாலும் அதுகளுக்குப் பரிகாசமாக இருக்கிறது. அதுகள் இஷ்டப்படியே விட்டுவிடுவோம் என்று நான் வாயையே திறப்பது கிடையாது. நம்மையும் மீறி அக்ஞானம் கேட்காமல்ஒன்றிரண்டு வார்த்தை சொன்னால் இந்தமாதிரி பேசுகிறதுகள்' என்றாள் பாட்டி.

"அமிர்தத்தைப்போட்டால்கூட விஷம்மாதிரி"

'அந்தமாதிரி விட்டுத்தான் உலகம் இந்த கதிக்கு வந்திருக்கிறது,' என்ருள் ருக்குவின் மாமியார்.

இத்துடனு நிற்கப்போகிறது? இன்னும் எவ்வளவோ அனர்த்தங்களைப் பார்க்கப்போகிருேம். எனக்கு அதெல்லாம்கூட வேடிக்கையில்லை. ஆபீஸ்விட்டதும் பஸ்ஸிலோ டிராமிலோ ஏறிக்கொண்டு வீட்டுக்கு வருகிறதுகளே. பஸ்ஸை விட்டு இறங்கியதும் பக்கத்துத் தெருவிலுள்ள வீட்டுக்கு நேராக வரலாமோ வியோ? இறங்கியவுடனே எதிரிலிருக்கும் ஹோட்டலுக்குள் நுழைந்து ஒரு நாலணு காசை ஹோட்டல்காரனிடம் கொடுத்துவிட்டு வந்தால் தான் அதுகளுக்கு மன நிம்மதி! என்ருள் பாட்டி.

'சொன்னுல் கோபித்துக்கொள்வார்கள். எனக்கு வேறு பாஷையை உபயோகப்படுத்தத் தெரியவில்லை. குடிகாரன் அவன் என்னதான் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு போனுல்கூட மதுபானக்கடையைப் பார்த்தவுடனே அவனையும் அறியாமல் அவனுடைய கால்கள் அந்தக் கடையை நோக்கி இழுத்துச் செல்லுமாம். அதேமாதிரி தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது ஹோட்டலைப் பார்த்துவிட்டால் தானுக கால்கள் அதை நோக்கிச் செல்லுகின்றன. அதற்குப் பசியோ வேளா, வேளையோ ஒன்றும் வேண்டியதில்லை. பார்த்துவிட்டால் போதும். நாக்கில் நீர் சுரக்க ஆரம்பித்துவிடும்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'இதற்காக நான் ஹோட்டல் பக்கமே போகவேண்டாமென்று சொல்லவில்லை' என்று பாட்டி சொல்லி முடிப்பதற்குள், 'வீட்டை முதல் பட்சமாக வைத்துக்கொண்டு, அதை இரண்டாம் பட்சமாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறீர்கள்' என்ருள் சரோஜா.

'எனக்கு நேரமாகிறது. நான் வருகிறேன். அவளை (நாட்டுப்பெண்ணை) அழைத்துக்கொண்டு வர அவன் (பிள்ளை) சாயங்கால வண்டிக்குப் போகப்போகிருனும். இதோடு மூன்றுதரம் போய் வந்தாகிவிட்டது. இது நாலாவது தரம். அவள் என்னமோ இன்னும் இரண்டு மாதத்துக்குக் குறைந்து வரப்போகிறதில்லை. எனக்கு நன்ருகத் தெரியும். அதைச் சொன்னுல் 'நம்ம பல்மேல் போட வருவானேயொழிய, அங்கே ஒன்றும் பேசிக்கொள்ள முடியாது. ஹூம்! என்னென்னதான் நடக்கிறதோ நடக்கட்டும்!' என்று அழுத்துக்கொண்டே எழுந்தாள் பாட்டி.

—★—

(பால்கன்-ஜீ-பாகி)

அசட்டுச் சுந்து

★

(பி. ஸி. பாலகிருஷ்ணன்)

ஒரு ஊரில் சுந்து என்று ஒரு பையன் இருந்தான். அவன் தன் தாயுடன் ஒரு சிறு வீட்டில் வசித்து வந்தான். அவன் தினந்தோறும் தன் அத்தை வீட்டுக்குப் போய் விட்டு வருவான். அத்தை அவனை வெகு செல்வமாக நடத்தி வந்தாள். சுந்து வீடு திரும்பும்பொழுது அத்தை அவனுக்கு ஏதாவது கொடுத்து அனுப்புவது வழக்கம்.

ஒரு நாள் சுந்து தன் அத்தை வீட்டுக்குப் போனபொழுது அவள் தன் பூந்தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள். ஆங்கே பூத்திருந்த அழகிய புஷ்பங்களைக் கண்ட சுந்து "அத்தை, எனக்குக் கொஞ்சம் பூ கொடுக்கிருயா?" என்று கேட்டான்.

"சரிடா கண்ணே, நீ வீட்டுக்குப் போகும்பொழுது தருகிறேன்" என்று பதிலளித்தாள் அத்தை.

அத்தை கொடுத்த புஷ்பங்களைக் கையில் இறுக வைத்துக் கொண்டு வீடு திரும்பினுன் சுந்து. பூவை இப்படியாடா கொண்டு வருவார்கள்! பூக்களை ஓர் இலையில் வைத்துக் கட்டி நசுங்காமல் இருப்பதற்காக ஒரு கூடையில் வைத்துத் தலையில் தூக்கிக்கொண்டு வர வேண்டும், தெரிகிறதா?" என்ருள். சுந்து தலையை அசைத்தான்.

மறுநாள் அவன், அத்தை வீட்டுக்குப் போனபோது அவள் அவனுக்கு அரைவீசை வெண்ணெய் கொடுத்தாள். சுந்து அதை ஓர் இலையில் கட்டி கூடை ஒன்றில் போட்டுத் தலையில் வைத்துக்கொண்டு வந்தான். வழியில் சூரியனின் வெப்பத்தால் வெண்ணெய் உருக ஆரம்பித்துவிட்டது. உருகி உருகி அவன் தலை வழியாய் வழிய ஆரம்பித்துவிட்டது. அவன் கோலத்தைக் கண்ட அவன் தாய் "ஐயோ, என்ன கோலம் இது!" என்று கத்தினுள்.

"வெண்ணெய் அம்மா, வெண்ணெய். அத்தை எனக்குக் கொடுத்தாள்" என்று பெருமையாகப் பதிலளித்தான் சுந்து.

"அட அசடே, வெண்ணெயை இப்படியா கொண்டு வருவார்கள்? சூடான நாட்களில் வெண்ணெய் உருகாமலிருக்க ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த ஜலத்தை எடுத்துக்கொண்டு அதில் வெண்ணெயைப் போட்டுக்கொண்டு வர வேண்டும்." என்று நாலுதரம் திரும்பத் திரும்பச் சொன்னுள் அவன் தாய்.

மறுநாள் அத்தையின் வீட்டுக்குச் சென்ற சுந்து ஓர் ரகசியத்தைக் கண்டுபிடித்தான். அத்தையின் நாய் ஐந்து சிறு குட்டிகள் போட்டிருந்தது. சிறு

" ஹிந்துஸ்தான் டைம்ஸ் " ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தியும், அவரது மனைவி ஸ்ரீமதி லட்சுமியும் சமீபத்தில் பர்லின் சென்றிருந்தனர். அவர்களிருவரும் அமெரிக்க விமானத்தில் புறப்பட்டு ரீன்மெயின் விமானகூடத்தில் இறங்குகையில் எடுத்த படம்.

நாய்க்குட்டிகளைக் கண்டிராத சுந்து அவைகளுடன் ஆச்சரியத்துடன் விளையாட முயன்ருன். அப்பொழுது அவனது அத்தை "அவைகள் இப்பொழுது விளையாடாது. நாலைந்து நாளில் பெரிதான பொழுது விளையாடும். அப்பொழுது உனக்கு ஒரு நாய்க்குட்டி கொடுக்கிறேன், நீ அதை உன்னுடன் கொண்டு போ'' என்ருள்.

நாய்க்குட்டிகள் எழுந்து ஓடி விளையாட ஆரம்பித்தன. சுந்துவின் அத்தை அவனுக்கு ஒரு குட்டியைக் கொடுத்தாள். அதைத் தூக்கிக்கொண்டு வீடு திரும்பினுன்.

வழியில் ஓர் ஓடையை அடைந்தான் சுந்து. அந்த ஓடை அருகே தண்ணீர் டப்பா ஒன்று கிடந்தது. அதில் தண்ணீரை நிரப்பி நாய்க்குட்டியை அதில் போட்டுக் கொண்டு வந்தான் சுந்து. நாய்க்குட்டி இறந்து விட்டது என்று சொல்லவும் வேண்டுமா?

அவன் புத்தியைக் கண்டு கோபமடைந்த அவன் தாய் "இனிமேல் நீ உன் அத்தை வீட்டுக்குப் போகக்கூடாது. நான் அவளைச் சந்தித்துப் பேசிவருகிறேன்.'' என்று சொல்லிவிட்டு வெளியே கிளம்பத் தயார் செய்து கொண்டாள்.

"சுந்து, வாசலில் கட்டிலில் கறிவடாம் இட்டிருக்கிறேன். அவைகளைக் காக்கை கொத்தாமல் ஓட்டு'' என்று சொல்லி விட்டு வெளியே சென்று விட்டாள்.

'ஓட்டு' என்பது 'ஆட்டு' என்று அவன் காதில் விழுந்தது. அவன் கட்டிலைப் பிடித்து இப்படியும், அப்படியும் அசைத்தான். அவன் ஆட்டின ஆட்டியில் கறிவடாம் இட்டிருந்த துணி பறந்து மண்ணில் விழுந்தது. அப்படியே கறிவடாம் எல்லாம் நாசமாய் விட்டது.

அவன் தாயார் அவனைக் கோபத்தோடு நையப் புடைத்தாள். அவன் என்ன செய்வான் பாவம்! காதில் கேட்டபடியே வேலை செய்தான். அவனை அடித்து என்ன பயன்!

—❀—



டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

"எதையும் சரியாக கவனித்து வாங்குபவருக்கும் தயாரித்தவர்போல் புத்தி கூர்மை வேண்டும்''
என்பது உங்களுக்குத் தெரியுமா?

பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில் ஓர் பரிசோதிக்கப் பட்ட நல்ல கேச டானிக். பெருந்தன்மை படைத்த நவீன ஆடவரும், பெண்டிரும் இதை உபயோகித்து திருப்தியடைவர்.

கேசத்துக்கு இயற்கை அழகளித்து இளமையில் நரை மயிரை அடையாதபடி பாதுகாக்கும். அதன் நறுமணம் திருப்தியளிக்கக் கூடியது. வெகு விரைவில் கேசம் வளர உதவும்.

பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில் :

4 அவு. பாக்கிங்	ரூ. 1—4—0	புட்டி ஒன்று.
8 அவு. ,,	ரூ. 2—0—0	,,

தபால் செலவு பிரத்யேகம்.

எல்லா முக்கிய கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்போர்:—

RATHOD TRADING COMPANY,

P. B. 543, Perfumers, MADRAS 1.

அட்டைப்படம்

★

பண்டித நேரு சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரி என்ற ஹோதாவில் சென்னை வருவது இதுதான் முதல்தடவை. சுவாஸத்தை வெளிவிடுவதற்கும், அதை உள்ளிழுப்பதற்கும்கூட ஒழிவில்லாமல் அவர் நாட்டின பிரச்னைகளை சர்வதேசப் பின்னணியில் வைத்து ஒப்பிட்டு கவனித்து வருகிறார். இருப்பினும் அவர் சென்னையில் ஈடுபடும் நிகழ்ச்சிகளுக்குக் குறைவில்லை. கார்ப்பொரேஷன் உபசாரப்பத்திரத்தை ஏற்கிறார்; காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசுகிறார். இதுபோன்ற பல அலுவல்கள் இவ்வளவுக்கும் ஈடுகொடுத்து வரும் பண்டித நேரு இவ்விதழின அட்டையை அலங்கரிக்கிறார்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷிமி பிரசாதம்
(லெப்பர் கியூர்)
18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.
40 நாட்களில் குணம்
தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.
லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.



திருவனந்தபுரம் அட்வகேட் ஸ்ரீ என். வரதராஜ ஐயங்கார் புதல்வி சௌ. அம்புஜத்திற்கும், பாளையங்கோட்டை ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்கார் குமாரன் சி. வேதாந்தத்திற்கும் சமீபத்தில் திருமணம் நடந்தேறியது.


வைரங்கள், நகைகள்

பருமனைக்கொண்டு மட்டும் வைரத்தின் மதிப்பை அளவிட முடியாது.
வர்ணம், பட்டை பிரகாசம், இவற்றையும் கொண்டே மதிப்பிட வேண்டும்
ஆகையால் வைரமோ, வைரம் பதித்த நகைகளோ வாங்கும்போது, நம்பிக்கை
யும் அனுபவமும் வாய்ந்த நகைவியாபாரியின் உதவியை நாடவேண்டும்.

உம்மிடி
ராமையா செட்டி குருஸாமிசெட்டி & கோ.
23-25, சைனாபஜார் ரோடு, சென்னை.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும்.

தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

குகன்
சோப்புகள்
சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

''ஷெல்'' ரிபைனிங், மார்கெட்டிங் கம்பெனி லிமிடெடின் தார்ன்டன் ஆராய்ச்சி ஸ்தாபன திறப்பு விழாவும், புது டீசில் பியூயல் லபோரேடரி ஆரம்ப விழாவும் மே 20-ந்தேதியன்று நடைபெற்றது. புது டீசில் பியூயல் லபோரேடரியை கடற்படை தளபதி, இதர பல பிரமுகர்கள் முன்னிலையில் ஷெல் பெட்ரோலியம் கம்பெனி லிமிடெட் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ ஜார்ஜ் லே - ஜோன்ஸ் திறந்துவைத்தார். அதில் நடைபெறும் ஆராய்ச்சி வேலைகளை பிரமுகர்கள் பார்வையிட்டனர். திறப்பு விழாவில் கலந்துகொள்ள பிரமுகர்கள் கூடி நிற்பதை இடது பக்கத்தில் காணலாம்.



குடந்தை ''மித்திரன்'' ஏஜண்டு ஸ்ரீமான் ஆர். சேதுராமன் பெண் ஸௌ. செல்லம்மாளுக்கும், குடந்தை, அஷ்டபுத்திர ஸ்ரீ என். கிருஷ்ணஸ்வாமி ஐயரின் குமாரன் சி. கே. சுப்பிரமண்யம் எம்.ஏக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

விநோத கதா மஞ்சரி விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)
சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

புண்ணாகி வலிக்கும் காலா?

உலக புகழ் பெற்ற இந்த ஜாம்பெக் உபயோகியுங்கள்

இவ்வற்புதமூலிகை மருந்தாகிய ஜாம்பெக், களைப்பு, வலி; புண், வீக்கம் இவற்றிற்கு நிவாரணமளித்து புண்ணாகிய காலை குணமாக்கி உமது கால் ஆரோக்கியமாக விருக்கச் செய்யும். கெட்டி சருமத்தையும் ஆணிகளையும் ஜாம்பெக் மிருதுவாக்கி சுலபமாக அகற்றப்பட உதவும். மிருகக் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

சரும நோய்கள், காயங்கள், பூச்சி கடிகள், புண்ணாகி வலிக்கும் காயங்கள் தசை வலி, தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.



Zam-Buk

சமனமூட்டி, குணமாக்கும் கிருமிநாச மருந்து.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனூர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

மறுக்க முடியாத உண்மை !
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள் :

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:— "தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது."

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலன்களைக் கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸூரத்கார்-பிகானிர் ஸ்டேட் :—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷராய்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்".

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, களுடாரா, கொழும்பு, சிலோன்:—"தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும். எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O.
(தென் இந்தியா)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"
(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி *R. M.* நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)



தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

Quality always tells!
hence BUY **L.G ASAFOETIDA**



எல். ஜி பெருங்காயமே உயர்ந்தது

ఎల్.జి

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம் செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள் காலணாவுக்கு இரண்டு.

சென்னைக்கு சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

கலியாண வெகுமதிகளுக்கு பல ஊர் பட்டு & நூல் றவுக்கை ரகங்கள் சாசமாய் கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

தரகரை நம்பினல் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதை யுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்ரும் மனிதரை நம்பினல் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு [illegible] வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

அதிகமான வரும்படி கிடைக்கும் இடத்திற்கே அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனுல் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியாபாரம் செய்வதே உங்களுக்கு நல்லது!

ஸூரஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற
வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், : : சென்னை.